# 'அப்பல்லோ - 12' வீரர்களை வரவேற்பதற்கு எல்லாமே தயார்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 11
இதழ்: 285
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் கார்த்திகை 10 நம்மான் 14 செவ்வாய்க்கிழமை [25-11-69]

வாஷிங்டன், நவ. 24

அப்பல்லோ-12 விண்வெளி வீரர்கள் பூமியை நோக்கிய பாதையில் பாதித்தூரத்துக்குமேல் கடந்து விட்டதாகவும், நாளை அதிகாலையில் பசிபிக் சமுத்திரத்தில் அவர்கள் பத்திரமாக வந்து இறங்குவதற்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் தரைக் கட்டுப்பாட்டதிகாரிகள் அறிவித்தனர்.

இன்று காலையில் பூமியிலிருந்து சுமார் ஒரு லட்சம் 60 ஆயிரம் மைல்களுக்கப்பாலிருந்து அவர்கள் பூமியில் பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றை நடத்தினார்கள். இன்று பிற்பகல் அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டது.

பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்கு சந்திரனில் இறங்கியவர்களான கொன்ருடும், பீனும் பதிலளிக்கையில் சந்திரத்தரையில் நடப்பதில் எங்களுக்கு சிரமம் இருக்கவில்லையென்றும் எதிர்காலத்தில் சந்திரனில் இறங்குகிறவர்களுக்கு இன்னும் வசதியாக இருக்கும் வகையில் கடினம் அல்லாத உடைகள் கொடுக்கப்படலாம் என்றும் கருத்து வெளியிட்டார்கள்.

பத்திரிகை நிருபர்களின் கேள்விகள் தரைக் கட்டுப்பாட்டதிகாரிகளால் அப்பல்லோ வீரர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டன. அதற்கு முன்னர் தொலைக் காட்சியொன்றையும் அவர்கள் நடாத்தினர்கள்

## சந்திரத் தூசியினால் விண்வெளி வீரர் மூச்சுத் திணறினர்கள்

### அப்பலோ-12 இன்று அதிகாலை பசுபிக்கில் இறங்கும்

ஹூஸ்டன், நவ. 23

பூமியை நோக்கி வேகமாக விரைந்து கொண்டிருக்கும் அப்பல்லோ-12 விண்வெளிவீரர்கள் இன்று அடிக்கடி மூச்சுத்திணறினர்கள் சந்திரத்தரையிலிருந்து கொண்டுவரப்படும் மண், கற்பாறை போன்றவற்றிலிருந்து திடீரென வெளிவந்த தூசிப்படலமே இவர்களை இப்படித் திணற வைத்தது.

சார்ல்ஸ் கொன்ராட் ஹூஸ்டன் கட்டுப்பாட்டுநிலையத்துக்கு புழுதிப்படலத்தால் தாம்படும் கஷ்டத்தை இன்றுமாலை தெரிவித்தார்.

25-ம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 2-23 மணிக்குபசுபிக்சமுத்திரத்திரத்தில் வந்திறங்கும் அப்பலோ-12 விண்வெளி வீரர்கள் நாளை விண்ணில் இருந்தபடியே முதல் தடவையாகச்செய்திமகாநாடு ஒன்றை நடாத்துவர்.

விண்வெளிப் பயணத்துக்கு முன்னதாகவோ, அல்லது விண்வெளிப்பயணம் முடிந்த பின்னதாகவோ செய்தி மாகாநாடு நடத்தப்பட்டுவந்தது. ஆனல் இம்முறை முதல் தடவையாக உலக பத்திரிகையாளர்களுக்கு ஹூஸ்டன் கட்டுப்பாட்டுநிலைய மூலம் விண்வெளி வீரர்களிடம் கேள்விகளைக் கேட்பர்.

நிலாவாகனம் சந்திரத் தரையில் விழுந்து நொறுங்கியசப்தம் கூடிய நேரம் கேட்டது குறித்து விஞ்ஞானிகள் இப்போதும் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர்

அப்பலோ-12 கலத்தை பத்திரமாகமீட்பதற்கான நடவடிக்கைகள் இப்போது துரிதமாக மேற்கொள்ளப்படுகிறது.

### அழகிகளுக்குப் பாதுகாப்பு

லண்டன், நவ 23

லண்டனில் நடக்கவிருக்கும் உலக அழகி போட்டியில் கலந்து கொள்ளும் பெண்கள் தங்கியிருக்கும் இடத்துக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

படப்பிடிப்பாளர்கள் அழகிகள் யாரையாவது நிர்வாணமாகப் படம் பிடித்து விடுவார்களோ என்ற பயத்தினலேயே இந்த எச்சரிக்கை நடவக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஒரு அவுன்ஸ்

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் பெருந்தொகைச் சீரகம் கையிருப்பிலுள்ளதால் இந்த மாதம் தொடக்கம் இதன் பங்கீட்டை இரட்டிப்பாக்க உணவுப் பொருள ஒருங்கிணைப்புக்குழு தீர்மானித்துளளது. இதனல்தற்சமயம் பங்கீட்டு முறையில் வழங்கப்படும் அரை அவுன்ஸ் சீரகம் ஒரு அவுன்ஸாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 'உல்லாசப் பிரயாணிகளுக்கு

# வடபகுதி தமிழ் பொலிசாரின் இடமாற்றம் ரத்தாகலாம்?

## தேர்தலைமுன்னிட்டு மேலும் தமிழ்தெரிந்த பொலிசார்வருவர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அடுத்த ஜனவரியில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவிருந்த 43 தமிழ் பொலிசாரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்படலாம். அத்துடன் மேலும் சுமார் 50 தமிழ் தெரிந்த பொலிசார் வெளிமாகாணங்களிலிருந்து இங்கு வந்து சேரக்கூடும். கடந்த வார இறுதியில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தனவுடன் வடபகுதிபொலிஸ்சுப்பிரின்டென்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

வடபகுதியிலிருந்து ஜனவரியில் வெளிமாகாணங்களுக்கு இடமாற்றலாகிச் செல்லும் பொலிசாரில் 43 பேர் தமிழர்களாவர். விருப்பவர்களில் ஒருவர்கூட தமிழர் அல்ல

இதுசம்பந்தமாக 3 அம்சங்களை மையமாக வைத்து பொலிஸ் சுப்பிரின்டன் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தனவுடன் இடமாற்றம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

## மீன் பிடிக்கச் சென்றவர் பிணமாகக் கரை சேர்ந்தார்

புலோலி, திங்கள்

குடாரப்பு கடற்கரையில் கத்தோலிக்க தேவாலயத்திற்கு முன்பாக இனம் தெரியாதசடலம் ஒன்று நேற்று முன்தினம் ஒதுங்கியது. இச்சடலம் கடற்கரையில் கிடப்பதை ஞானப்பு என்ற சீவல் தொழிலாளி கண்டு நாகர் கோயில் கிராமசேவகருக்குத் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த கிராமசேவகர், சடலம்குடத்தனை கரையூரைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரம் (வயது 27) என்பவருடையது என அடையாளம் கண்டு பிடித்தார். பருத்தித்துறைப்பொலிஸாருக்குவிஷயம் அறிவிக்கப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி மரண விசாரணை நடாத்தினர்.

மரண விசாரணையில் அத் ஊரைச்சேர்ந்த வல்லிபுரம்

வும், பயணம் மிகவும் சிக்கலாக இருந்ததாகவும் சற்று நேரத்தில் பின்புறம் பார்க்கையில் இறந்தவரான கந்தையா சந்திரசேகரத்தைக் காணவில்லையெனவும், அடுத்த கட்டுமரத்திலிருந்த சின்னத்துரை சின்னராசா வைக் கூப்பிட்டு இதுபற்றிச்சொன்னதாகவும் உடனே கட்டுமரத்தை கரையோரம் திருப்பியதாகவும், இருவரும் தேடிப்பார்த்தும் சடலத்தை காணவில்லையென்றும்சொன்னர். தனக்கு மூன்று பெண் குழந்தைகளிருப்பதாயும், மூன்றுவது பெண் குழந்தை பிறந்து 62 நாள் தான் ஆவதாயும், தமது கணவன் வழக்கமாகக்காலை 5 மணியளவில் மீன் பிடிக்கச்செல்வதாகவும் சின்னத்துரை சின்னராசா வந்து எனது கணவனைக்காணவில்லையென்று சொன்னதாகவும், பின்சடலம்கிடப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

வடபகுதியிலிருந்து ஜன வரியில் வெளிமாகாணங் களுக்கு இடமாற்றலாகிச் செல்லும் பொலிசாரில் 43 பேர் தமிழர்களாவர். இவர்களுக்காக வெளிமாகாணத்திலிருந்து இங்கு வர விருப்பவர்களில் ஒருவர்கூட தமிழர் அல்ல

இதுசம்பந்தமாக 3 அம் சங்களை மையமாக வைத்து பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபய குணவர்த்தனவுடன் இட மாற்றம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

O பொதுத் தேர்தல் காலத்தில் தேர்தல் கூட்டங்களின் பேச்சுச் செய்திகளை சேகரிக்க போதிய தமிழ் தெரிந்த பொலிசார் வடக்கிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றக்கூடியதாக இருக்கவேண்டும்.

O குற்றத் தடுப்பு, போக்குவரத்து விபத்துக்களைப் பற்றிய புகார்களையும் சாட்சியங்களையும் பதிவு செய்ய போதிய தமிழ் தெரிந்த பொலிசார் கடமையாற்றவேண்டும்.

O இரவுநேரங்களில் வீதிகளில்ரோந்துசுற்றும் பொலிசார் சந்தேக நபர்களை விசாரணை செய்ய போதிய தமிழ் தெரிந்த பொலிசார் வடக்கில் கடமையாற்ற வேண்டும்.

இம்மூன்று முக்கிய அம்சங்களின் பேரிலேயே இப் பேச்சுவார்த்தை நடந்ததாகத் தெரியவந்துள்ளது.

இப்பிரச்னைகளை ஆராய்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மாகாண ரீதியாக நாடுபூராக ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் எத்தனை தமிழ் பொலிசாரும், தமிழ் தெரிந்த பொலிசாரும் கடமையாற்றுகின்றார்கள் என்பது பற்றிய முழு விபரப் பட்டியலைக் கோரியுள்ளார்.

இதற்கிடையில் பொதுத் தேர்தலை மையமாக வைத்து உயர்தர பொலிஸ் அதிகாரிகள் எவரும் புது வருடத்தில் இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள எனவும் பொலிஸ் வட்டாரங்கள தெரிவித்தன

(கா. நி.)

# தமிழர் சுயாட்சி கழகத்துக்கு இரு வர்ணக் கொடி

## செயற் குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வாய் தமிழர் சுயாட்சிக்கழகத்தின் செயற்குழுக்கூட்டம் கழகத்தலைவர் திரு. வ நவரத்தினம் எம்.பி தலைமையில் கூடிய போது கழகத்தின் கொடி பற்றி முடிவு செய்யப்பட்டது.

போராட்டத்தின் மூலமும் தியாகத்தின் மூலமும் விடுதலை பெற்று பசுமையான தமிழ் ஈழத்தை உருவாக்குவதென்னும் பொருளை உள்ளடக்கிபச்சை, சிவப்பு ஆகிய இருவர்ணக்கொடியை கழகக்கொடியாகசெயற்குழுஏற்றுக்கொண்டது

கழகப் பிரசாரக்கூட்டங்களை நடாத்துவதற்காக ஒரு குழுவொன்றும் அமைக்கப்பட்டது. திரு. வ நவரத்தினம் எம்.பி தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழுவில் உடும்பராய் பட்டினசபை உறுப்பினர் மு.சி கனகசுந்தரம் நெடுந்தீவு கிராமசபை உறுப்பினர் ம. கணபதிப் பிள்ளை, புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

# 5 பிள்ளைகளின் தந்தை நச்சுத் திராவகத்துக்கு பலி

யாழ்ப்பாணம், செவ்வாய் கடன் தொல்லையால் மாதக் கணக்காகக் கஷ்டப் பட்டதாகக் கூறப்படும் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் இறுதியில் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பு சுப்பிரமணியம் (35வயது) என்பவரே இவ்வாறு மரணமானவர்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் கராஜ் வைத்திருந்த மரணமானவர் கடன் தொல்லையால் அதை மூடிவிட்டு வேறொருவரின் கராஜில் வேலை செய்துவந்ததாகவும், கடன் தொல்லை தாங்காமல் அவர் நச்சுத் திராவகம் அருந்தி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டதாகவும் மரணவிசாரணை அதிகாரி திரு என் இராசநாயகம் நடாத்திய விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சுப்பிரமணியம் அங்கு மரணமானார் தற்கொலை என்றுதீர்ப்பளிக்கப்பட்டது (கா நி)

<u>முத்தக்காட்சிகள்</u>

## ராஜ்யசபையில் விவாதம்

புதுடில்லி, நவ. 24

அகில இந்திய ரேடியோ குழு வொன்று நடத்திய ஆராய்ச்சியின் படி 70 சதவிகிதத்தினர் முத்தமிடும் காட்சிகளை எதிர்க்கிறார்கள் என்று இந்திய ராஜ்யசபையில் தெரிவிக்கப்பட்டது

ரேடியோ குழுவினர் 40 வயதுக்கு மேற்பட்டவர்களைத்தான் பேட்டிகண்டார்கள் என்றும் இந்தவயதுக்காரர்களுக்கு முத்தமிடுவதில் அக்கறை இராதுஎன்றும் குல்கர்னி என்ற அங்கத்தவர் புகார் செய்தார் இந்த நாட்டில் 15 வயதுக்கும் 20 வயதுக்குமிடையிலுள்ள முற்போக்குசக்திகள் பற்றி கவனிக்கப்படவில்லையே என்றும் அவர்கவலைப்பட்டார். வயது எதுவாயிருந்தாலும் வாழ்க்கையின் சில அம்சங்களில் எல்லோருக்கும் அக்கறையுண்டு என்று மந்திரி தமதுபதிலில் கூறினார்.

சுழிபுரம், திங்கள்

காசிகாண்ட புராணப்படிப்பு வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் தினமும் மாலையில் நடைபெறுகின்றது. தொடர்ந்து ஒரு மாதம் வரை படிப்பு நடைபெறும்.

## "தற்போதுள்ள பிரச்னை இதுவே"

—கா.பொ.இ

அல்லைப்பிட்டி, திங்கள்

"தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு முயல்வதுடன் இருக்கும் உரிமைகளைப் பறிக்க விடாமல் தடுப்பதற்கும் தமிழ் மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கும் போராட வேண்டிய சூழ்நிலையே இப்பொழுது உருவாகியிருக்கின்றது. என நாரந்தனையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ.இரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. த. அருமைநாதர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருவாளர்கள் சி.புவனேந்திரன், என். கே. தர்மலிங்கம் ஆகியோரும் உரை யாற்றினர்.

கண்டு பிடித்தார். பருத்தித் துறைப்பொலிஸாருக்குவிஷயம் அறிவிக்கப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி மரண விசாரணை நடாத்தினார்.

மரண விசாரணையில் அதே ஊரைச்சேர்ந்த வல்லிபுரம் சிவலிங்கம் (வயது 19)சாட்சியளிக்கையில், தானும்இறந்தவரும் நேற்று முன்தினம் மீன்பிடிக்க கட்டு மரத்தில் சென்றதாகவும், கடலில் அலை வேகமாக அடித்ததாக பிறந்து 62 நாள் தான் ஆவதாயும், தமது கணவன் வழக்கமாகக்காலை 5 மணியளவில் மீன் பிடிக்கச்செல்வதாகவும் சின்னத்துரை சின்னராசா வந்து எனதுகணவனைக்காணவில்லையென்று சொன்னதாகவும், பின்சடலம்கிடப்பதாக கேள்விப்பட்டதாகவும் சொன்னார்.

மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்செயல் மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## இரு சிறுவர் துணிச்சல்:

# திருடினார்களாம்

உடுப்பிட்டி, திங்கள்

மலாயன் பென்சனியர்ஒருவர் வீட்டிலே இரு சிறுவர்கள் பகற்கொள்ளை நடாத்தியதாகத் தெரிவிககப்படுகிறது வீட்டுக்காரர்வெளியே சென்றிருந்த சமயம் 8 வயதுள்ள சிறுவனொருவனும், 12 வயதுள்ள சிறுவனும் ஒனும் சேர்ந்து வீட்டினுள் புகுந்து குசினியில் சாப்பிட்டுவிட்டுத் திறப்பைத் தேடிஎடுத்து அறைக் கதவைத் திறந்து பணம், சுமார் 1000 ரூபா பெறுமதியான டிரான்சிஸ்ரர்ரேடியோ ஆகியவற்றைக் களவாடிச்சென்றனராம்.

வீட்டின் சொந்தக்காரர் வீடுதிரும்பியதும் வீட்டின் அலங்கோல நிலையையும், கதவுதிறந்து ரேடியோ திருடப்பட்டிருப்பதையும்கண்டு திடுக்கிட்டனர். பிரஸ்தாப சிறுவர்கள் தாம் திருடிய ரேடியோவை 2 ரூபாவிற்கு வேறொருவீட்டில் விலைபேசியதாகத்தகவல் கிடைக்கவே ரேடியோவிற்கு விலைபேசிய சிறுவனைத் துரத்திப் பிடித்த வீட்டுக்காரர் அச்சிறுவன் மூலம் அவரது வீட்டு வேலியின் அருகிலுள்ள புதரில் புதைக்கப்பட்டிருந்த தனது டிரான்சிஸ்ரர் ரேடியோவை மீட்டுக்கொண்டார்.

இதுசம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இரு சிறுவர்களையும் கைதுசெய்த பொலிஸார், சிறுவரின் வயதை உத்தேசித்து வீட்டுச் சொந்தக்காரரின் சம்மதத்தின் பேரில் அவர்களை எச்சரித்து விடுதலை செய்தனர்.

## ரயிலில் நெரியுண்டு மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்துக்கும் நாவற்குழிக்குமிடையில் இனந்தெரியாத நபரொருவர் நேற்றுக்காலை ரயிலில் நெரியுண்டு மரணமாகிக் கிடக்கக் காணப்பட்டார். யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ்ார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(கா. நி.)

## பருத்தித்துறை நகரவாசிகளுக்கு.

இம்மாதம் 30 திகதி நடைபெறவிருக்கும் பருத்தித்துறை நகர சபைத்தேர்தலில் 8வட்டாரங்களில் போட்டியிடும் 19 அபேட்சகர்களின் அறிமுகம் நாளைய மறுதினம் புதன்கிழமை (27-11-69) தொடக்கம் 'ஈழநாடு' பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரவிருக்கிறது. உங்கள் பிரதிகளுக்கு இன்றே உங்கள் ஏஜண்டுகளிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்

## திருநாள்

புலோலி, திங்கள்

இப்பகுதி ஆலயங்களிலெல்லாம் கார்த்திகைத்திருநாள்கொண்டாடப்பட்டது. புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் கார்த்திகைத் திருநாளன்று 'கார்த்திகைக் குமரன்' என்னும் பொருள்பற்றி பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலையத்தைச் சேர்ந்த திரு. இரத்தினசபாபதி சொற்பொழிவுநிகழ்த்தினார்.

கிழமை அதிகாலை 2-23 மணிக்குபசுபிச்சமுத்திரத் திரத்தில் வந்திறங்கும்

நடவடிக்கைகள் இப்போது துரிதமாக மேற்கொள்ளப் படுகிறது.

முறையில் வழங்கப்படும் அரை அவுன்ஸ் சிரகம் ஒரு அவுன்ஸாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# 'உல்லாசப் பிரயாணிகளுக்கு வழிகாட்டும் வேலை'

## பட்டதாரிகள் நிலை பற்றி கோப்பாய் எம். பி. புத்திமதி

கோப்பாய், திங்கள்

"இலங்கையிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அன்றி அரசாங்க உத்தியோகத்தை மேலும் நம்பியிருப்பதால் பயனெதுவும் ஏற்படப்போவதில்லை. சிறு சிறு குடிசைத் தொழில்கள் கைத்தொழில்கள் மூலம் தம் வாழ்க்கையை நடாத்த முன்வரவேண்டும். இதனால் வேலையற்ற பிரச்னைக்குப் பட்டதாரிகளே ஒரளவிற்குத் தீர்வுகாணமுடியும்.

இவ்வாறு அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகளின் கோப்பாய் கிளையின் ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை கூறினார். கூட்டம் கோப்பாய் நாவலடி சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு கே சதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது:

'மலேஷியாவைப் பொறுத்தவரையில் அங்குள்ள படித்தவர்கள் எத்தகைய சிறுதொழிலெனினும் செய்து தங்கள் வாழ்க்கையை நடாத்துகிறார்கள் அவர்கள் அரசாங்கத்தை மாத்திரம் நம்பியிருப்பதில்லை. இந்த முறையை நமது நாட்டு வேலையற்ற பட்டதாரிகளும் பின்பற்ற வேண்டும்.

ஏம் நாட்டுப் பட்டதாரிகள் உல்லாசப் பிரயாணிகளுக்கு வழிகாட்டிகளாகவும் அவர்களுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுத்தும் ஒருவிதமான சொந்தத் தொழிலை மேற்கொள்ளலாம். இது நாட்டுக்குச் செய்யும் ஒரு சேவையுமாகும்.

அரசாங்கத்தால் அச்சுவேலியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கைத்தொழிற்பேட்டையில் படித்த வாலிபர்கள், பட்டதாரிகள் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கலாமென நினைக்கிறேன். ஆனால் பட்டதாரிகள் எந்தவித சிறு தொழில்களையும் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் ஆட்சியேற்றிருந்த சோஷலிஸ அரசாங்கத்தால்தீர்க்கமுடியாத இப் பிரச்னையை தற்போதைய அரசாங்கம் தீர்க்குமென்பது நிச்சயமற்றது.

ஆகவே பட்டதாரிகள் அடுத்துவரும் காலங்களில் ஆசிரிய சேவைகளையும், அரசாங்க உத்தியோகங்களையும் நம்பியிராது, அத்துடன் வேலையற்றிராது வாழ்க்கையை முன்னேற்ற உழைக்க வேண்டும்."

## "விவசாயப் படை வீரர்களுக்கு

# வசதியான வாழ்க்கை விரைவில் கிடைக்கும்"

விஸ்வமடு, திங்கள்

"நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட விவசாயப் படை முகாம்கள் என்றும் இருக்கும். ஏழை விவசாயிகள் எல்லோரும் இதன் மூலம் ஒரு காலத்தில் நிச்சயம் பணக்காரராவார்கள்" என விஸ்வமடு விவசாயப் படை முகாமுக்கு விஜயம்செய்த பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தெரிவித்தார். பிரதமருக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் தொடர்ந்து பேசியதாவது: "வேலையில்லாப் பிரச்னையை ஒழிப்பதற்காகவே விவசாயப் படை முகாம்கள் தொடக்கப்பட்டன; இவற்றின்மூலம்இன்று ஏழை விவசாயிகளும் படித்த வாலிபர்களும் வாழக்கூடியதாகஇருக்கிறது. உணவு விஷயமாகப் பிறநாட்டுக்குப் பல கோடி பணம் நாம் கொடுக்கின்றோம். உணவுற்பத்தியை நாமே பெருக்கிக் கொண்டால் இம்பணம் மீதமாகும், எமது விவசாயத்திற்கு முக்கியமாக இயந்திர வகை தேவைப்படுகிறது. இயந்திரங்களையும் பிறநாடுகளில் வாங்காமல் நமது நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டும். விவசாயப் படை வீரர்களுக்கு வசதியான வாழ்க்கை விரைவில் வரும்"

விஸ்வமடு விவசாயப்படை சார்பில் வீரர் அன்ரனெனட் பேசினார். விவசாயப்படை ஆணையாளரும் பேசினார்.

## 12 ஆயிரம் பரீட்சார்த்திகள்

மாவிட்டபுரம், திங்.

வட இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க ஐந்தாம் தரப் பரீட்சை நேற்று நடைபெற்றது.

190 பரீட்சை நிலையங்களில் நடந்த இப் பரீட்சையில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரீட்சாத்திகள் கலந்து கொண்டனர்.

## நான்கு அங்கத்தவர்கள் நடவடிக்கை

ஊர்காவற்றுறை, திங்கள்

அல்லைப்பிட்டி கிராம சபைத் தலைவர் திரு. செ. தவவிநாயகம்மீதுநம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு நான்கு அங்கத்தவர்கள் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

நான்கு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு அனுப்பிய வேண்டுதலின் மீது விசேட கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஆணையாளர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

சிறுபிள்ளை மருத்துவ நிபுணரிக்கு தாதி / மருத்துவிச்சி, மருந்து கலப்பவர் தேவை. விபரங்களுக்கு 61, மின்சாரநிலைய வீதி, பெரிய கடை, யாழ்ப்பாணம். 1554

அனுபவம் வாய்ந்த பாண் பிஸ்கட் போடும் தொழிலாளர்கள் தேவை. நேரில் சந்திக்கவும். நல்ல சம்பளம் கொடுக்கப்படும். உரிமையாளர் சு. மாணிக்கம், மயிலன் பேக்கரி, வியாபாரி மூலை, பருத்தித்துறை. 1559

### விற்பனைக்கு

காணி:

நல்ல தண்ணீர் வசதியுள்ள இரண்டு போகவிளைவு கொண்ட 10 ஏக்கர். காணியின் பெயர்: பஞ்சவனம். இடம்: 4-ம் வாய்க்கால், கரடிப்போக்கு, கிளிநொச்சி. விளம்பர இல. 1558, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1558

எமது நிலையத்தில் மாணவத் தாதிமரைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் 6—10 சத முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். நிர்வாகி, அறிவியல் கல்லூரி, பலாலி வீதி, திருநெல்வேலி. 1559

வோட்டெக்சன், கிராம்பியன் அம்பிளிபயர் பிலிப்ஸ் ரேப்றெக்கோடர், கோண், யூனிற், மைக், கொண்வேட்டர். ரஞ்சன்ஸ், 183, கண்டிவீதி, மாம்பழம் சந்தி, அரியாலை. 1562

## சங்கானைப் பட்டினசபை கேள்வி அறிவித்தல்

30-11-1969-ம் திகதி பகல் 12 மணி வரை சங்கானைப் பட்டினசபைத் தலைவரால் பின்வருவனவற்றுக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பிளாக் வீதித் திருத்த வேலை.
2. ஆட்டிறைச்சிக் கடை குத்தகை 1970.
3. வண்டிக்காலைக் குத்தகை—1970.
4. ஆஸ்பத்திரிக்கு மருந்து விநியோகம் - 1970.
5. 1970-ம் ஆண்டுக்கான காகிதம், புத்தகங்கள் அச்சடித்தல்.

பிளாக் வீதித் திருத்த வேலைக்கு கேள்விப்பிணையாக ரூபா 25/-ம், ஏனையவற்றிற்கு ரூபா 10/-ம், கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 2/-ம் செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 29-11-69-ம் திகதி வரை வழங்கப்படும். விண்ணப்பங்கள் தனித்தனியாக உத்தியோகபூர்வமான பத்திரங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மற்றும் விபரங்களை பட்டினசபை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. ஆறுமுகம்.
தலைவர், பட்டினசபை
சங்கானை.

பட்டினசபை அலுவலகம்,
சங்கானை.
21-11-69. 1837

## சமமுடிவு

மாவிட்டபுரம், திங்.

அரியாலை விளையாட்டுக் கழகமும் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகமும் மோதிய ஒரு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்கள் போட்டு வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்துக் கொண்டனர்.

# இவ்வருட 'பி' பிரிவு சாம்பியன் ஸ்கந்தா

யாழ்ப்பாணம், செவ்

யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் கடந்த சில மாதங்களாக யாழ். விளையாட்டரங்கில் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவு சாம்பியன் போட்டியுடன் முடிவடைந்தது.

'பி' சாம்பியன் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிய கடுமையான போட்டியில், ஈற்றில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றி பெற்று சாம்பியனாகியது.

இப்போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்களின் பின் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வீரர் மகாலிங்கம் ஒரு கோலைப் போட்டார். இதன்பின் இக் கோஷ்டிக்கு ஒரு 'பெனல்டி' கிடைத்து அதைப் பயன்படுத்தாது விட்டு விட்டனர். இடைவேளையின் போது கொக்குவில் இந்து மட்டும் 1—0 கோலைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் இரு கோஷ்டிகளும் நன்றாய் விளையாடிய போதிலும், ஸ்கந்தாக் கோஷ்டி கோல்கள் போடும் கட்டங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தமையால், ஆட்டம் முடிவடையும் தறுவாயில் இக் கோஷ்டியின் முன்னணி வீரர்களான ஜெயகுமார், காங்கேசன் ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டனர். ஆட்ட முடிவில் ஸ்கந்தாக் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றி பெற்று சாம்பியனாகியது.

இப் போட்டிக்கு திரு யத்துகுலசிங் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற கோஷ்டிக்கு வெள்ளிக் கிண்ணத்தைப் பரிசளித்தார்.

இச் சுற்றுப் போட்டியை மிகத் திறம்பட நடாத்த உதவியாக இருந்த அனைவருக்கும். யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. ஈ. சபாலிங்கம் இப் பரிசளிப்பு வைபவத்தில் நன்றி கூறினார்.

(தே. நி)

உள்ளூராட்சிசேவை

## ஓவசியர்கள் சங்கம்

மாவிட்டபுரம், திங்கள்

வடகிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சேவை ஓவசியர் சங்கத்தின் 5-வது ஆண்டு மாநாட்டில் புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஞா. யோன் பிள்ளை (இறைவரி, மராமத்து ஓவசியர் காரைநகர் கிராமசபை) உபதலைவர்: திரு ஆ. செல்வசிவம் (மராமத்து ஓவசியர் மன்னார் பட்டினசபை), காரியதரிசி: திரு சி சிவகுரு மராமத்து இறைவரி ஓவசியர் கிராம சபை மயிலிட்டி) உபகாரியதரிசி திரு. கா. தில்லைநடராசா (மராமத்து இறைவரி ஓவசியர், பட்டினசபை முல்லைத்தீவு) தனாதிகாரி: திரு இ. துரைராஜசிங்கம் இறைவரி ஓவசியர் பட்டினசபை காங்கேசன்துறை) உபதனாதிகாரி: திரு. வே. மகேஸ்வரன் (இறைவரி மராமத்து ஓவசியர் குறிஞ்சாக்கேணி கிண்ணியா.) நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சங்காபிஷேகம்

புத்தூர், திங்கள்

பரமேஸ்வராக் கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் பரமேஸ்வரர் ஆலயத்தில் இம்மாதம் 26-ம் திகதி சங்காபிஷேகவிழா நடைபெறவிருக்கிறது. விசேட அபிஷேக நிகழ்ச்சிகளும் அலங்காரபூசையும் நிகழும்.

# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

கார்த்திகை மாதம் 10-ம் திகதி (25-11-69)

**மேஷம்**- பொருள்முடை தென்படும். கடன்பட நேரிடும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றமுடியாது போகலாம்.

**ரிஷபம்**- நாளெல்லாம் அலைச்சல். உடலில் நலிவு தோன்றும். பிணிக்கு இடம்கொடாது சுகாதாரத்தைப் பேணுக.

**மிதுனம்**- போதுமென்ற மனமும் புண்ணிய விடுப்பும் தலைதூக்கும். பொருள்வரவு நல்ல தினம்.

**கடகம்**- வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம் வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று.

**சிம்மம்**- தகுதியில் முன்னேற்றம் உண்டு. தரமான வாழ்வு கிட்டும். எதிரிகள் பணிவர் எதிலும் வெற்றி உண்டு.

**கன்னி**- புதியபாதை வழிதிறக்கும். புத்திரசுகமும் உண்டு. இதயத்தில் இன்பம்பொங்கும். இல்லத்தில் இனிமை தங்கும்.

**துலாம்**- தானிய நஷ்டத்தால் கவலைகள் தலைகாட்டும். தனிவழியை நாடுவீர் அமைதியும் பறக்கும்.

**விருச்சிகம்**- பொன்னான வாழ்வு பெண்ணாலே கிட்டும். கண்ணியம் கடைவிரிக்கும். கடமையும் சிறக்கும்.

**தனுசு**- சொற்சிலம்பம் ஆடுவதில் மற்றவரை சொக்க வைப்பீர். சொகுசானநாள், இன்று மிகவும் குஷியாக இருப்பீர்.

**மகரம்**- தெய்வபக்தி மேலிடும், புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பொதுமக்களின் மதிப்பு கிட்டும். சுமுகமான நாள்,

**கும்பம்**- தொழில்துறையில் வெற்றி, விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு. இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல்.

**மீனம்**- வரவில் உயர்வு காணும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும். அயலவர்களின் வாழ்த்தும் அவசியம் கிடைக்கும்.

உதைபந்தாட்டம்

# மாணவரிடம் ஆசிரியர் தோல்வி

உடுப்பிட்டி, திங்கள்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையேயான வருடாந்த உதைபந்தாட்ட மோதல் மேற்படி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டி ஆரம்ப முதலே விறுவிறுப்பை ஏற்படுத்தத் தொடங்கியது. ஆசிரியர் கோஷ்டியினர் திறமையாயாகப் பாசிங் விளையாடினர். மாணவர் கோஷ்டியினர் ஆசிரியர்களின் பாசிங் விளையாட்டிற்கு ஈடு கொடுகக முடியாமல் தடுமாறத் தொடங்கினர். இந்நிலையில் ஆசிரியர் கோஷ்டியின் வலதுகரை முன்னணிவீரர் திரு எம். எஸ் சீனித்தம்பி (அதிபர்) அடித்த பந்தை, மத்திய முன்னணிவீரர் திரு எஸ் கே இராசேந்திரம் தலையினால் இடித்துக் கோல் வலைக்குள் தள்ளினார்.

இதன்பின்னர் விளையாட்டில் சூடு பிடிக்கத் தொடங்கியது. மாணவர் கோஷ்டியின் முன்னணி வீரர்களின் பலமான அடிகளை எல்லாம் ஆசிரியர் கோஷ்டியின் கோல்காப்புவீரர் திரு. ஆர் எஸ் செல்லத்துரை மிகவும் சாதுரியமான முறையில் தடுத்துப் பந்தைப்பிடித்து ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டார்.

பின்னணிவீரர்கள் சற்று அயர்ந்திருந்த சந்தர்ப்பத்

[4ம் பக்கம் பார்க்க]

உதைபந்தாட்டம்

# பரமேஸ்வராக் கல்லூரி சாம்பியனாகியது

புத்தூர், திங்கள்

யாழ். விளையாட்டுச் சங்கத்தினால் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இவ்வருட 3-ம் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் யாழ் பரமேஸ்வராக் கல்லூரியும் யாழ் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் ஆட்டந்தொடங்கி இறுதி வரைக்கும் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளைக்கு முன்னதாக பரமேஸ்வராக் கல்லூரி விளையாட்டு வீரர்கள் மிகவும் உற்சாகமாக விளையாடினார்கள். அவர்கள் எத்தனையோ கோல்களைப்போடும் சந்தர்ப்பங்களைப் பெற்றபோதும் மத்திய கல்லூரி வீரர்களின் விடாமுயற்சியாலும் கோல் காப்பாளரின் அபார திறமையினாலும் கோல்கள் போடப்படாது தடுத்துநிறுத்தப்பட்டன.

...சாமி மத்தியஸ்தம் வகித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 25—11—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்...


## மைலன்ட்ஸ்

ஜவுளி மாளிகையில்

23-10-69 தொடக்கம் 9-11-69 முடிய உள்ள மலிவு விற்பனையில் பரிசுக்குரிய பில் இலக்கங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1-ம் | பரிசு பில் இலக்கம் | A 2259 |
| 2-ம் | ,, ,, ,, | A 1706 |
| 3-ம் | ,, ,, ,, | A 1835 |

மேற்குறித்த பில் வைத்திருப்பவர்கள் 10-12-69க்கு முன் தங்கள் பில்லைக் காட்டி பரிசுத் தொகையைப் பெற்றுக்கொள்ளவும்.

115 — 117 கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம். 1834

## தமிழ் கலை அரங்கத்தினர்

அளிக்கும்

## இன்னிசைக் கச்சேரி

இலங்கை-இந்திய வானொலிப்பாடகர்
திரு. A. K. கருணாகரன் சங்கீதவித்துவான்
30-11-69 மாலை 6-30 மணி
**வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்**
நுழைவுச் சீட்டுவிபரம்: 5/- 3/- 2/-
1-ம் 2-ம் வகுப்பு ஆசனங்களுக்கான சீட்டுக்களை கீழ்க்காணுமிடங்களில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்;
நடனமுருகன் மெடிக்கல் ஸ்ரோஸ், நெல்லியடி.
1836

## வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்
தென்னகத்திரைகளில்
100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்

# எதிர்நீச்சல்

ஜெய்சங்கர்-விஜயகுமாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்நீச்சல்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்-விஜயகுமாரி முத்துராமன்-வாணிஸ்ரீ நடித்த

# டீச்சரம்மா

மாதர்கள் எல்லா வகுப்புகளுக்கும் அரைக் கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோசனு நடித்த


# குலவிளக்கு

## யாழ். வெலிங்டன்

மற்றும்

சில சினிமாஸ் திரைகளில்

இப்பொழுது திரையிடப்படுகிறது



பத்மஸ்ரீ ★ சிவாஜி கணேசன் — நாட்டியப் பேரொளி ★ பத்மினி

காதல் ராணி ★ கே. ஆர். விஜயா — ஹாஸ்ய மன்னன் ★ நாகேஷ்

★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி

மற்றும் பலர் திறம்பட நடித்த

கமலா பிக்சர்ஸ் அளிக்கும்

# பாலாடை

டைரக்ஷன் ஏ. பீம்சிங் — பாடல் கண்ணதாசன் — இசையமைப்பு கே. வி. மகாதேவன்


ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர்கண்டுபிடிப்புகள், 5-45 அஸான்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 புல்லாங்குழல், 7-35 பேச்சு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மெல்லிசை, 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30,9-30

பிரிபோயா,போயா 2-30மணி

ரவிச்சந்திரன்- காஞ்சனு நடித்த

### அதே கண்கள்

வல்வெட்டித்துறை

## றஞ்சனு தியேட்டர்

தினசரி 2-30 6-30, 9-30.

சுந்தரராஜன். - பத்மினி பேபிராணி நடித்த

### குழந்தைக்காக

## ஸ்ரீ காலிங்கா

இணுவில்

தினசரி .6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

நாகேஷ்—கல்பனு நடித்த

### சாதுமிரண்டால்

## REGAL JAFFNA

Daily 4-45, 7, & 9-45 p.m

Dean Martin, Stella Stevens in

THE SILENCERS

(Adults)

## MANOHARA

Daily 3 shows,

Poya days 10-30 a m

DEATH IS A WOMAN

The all British SPY THRILLER

Exciting Entertainment For Action Fans!!

(Spy Film)

(Color Adults Only)


கோல்களைப்போடும் சந்தர்ப்பங்களைப் பெற்றபோதும் மத்தியகல்லூரி வீரர்களின் விடாமுயற்சியாலும் கோல் காப்பாளரின் அபார திறமையினாலும் கோல்கள் போடப்படாது தடுத்துநிறுத்தப்பட்டன.

இடைவேளைக்கு முன் எக்கோஷ்டியினரும்கோல்களைப் போடவில்லை.

இடைவேளையின்பின் இரு கல்லூரிகளும் வெகு விறுவிறுப்பாக ஆடின ஆட்டம் தொடங்கி 15 நிமிடத்தில் பரமேஸ்வராக் கல்லூரி காப்டன் சிவாநந்தராஜா லாவகமாக 1கோலைப்போட்டார். இறுதியில் பரமேஸ்வராக் கல்லூரி 1—0 கோல்களால் மத்தியகல்லூரியைத் தோற்கடித்து இவ்வருடத்துக்கான சாம்பியன் வெற்றிக்கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. இப்போட்டிக்குதிருவாளர் கே. கிருஷ்ண

## திருவள்ளுவர் வென்றது

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை திருவள்ளுவர் விளையாட்டுக்கோஷ்டியினருக்கும்வேலணை நாவலர் விளையாட்டுக் கோஷ்டியினருக்கும் சினேக பூர்வமான முறையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியொன்றில் 3-1 கோல்களால் திருவள்ளுவர் விளையாட்டுக் தோஷ்டியினர் வெற்றி பெற்றனர்.

## சாம்பியன் போட்டி

முசலி, திங்கள்

மன்னார்-புனிதசவேரியார் கல்லூரிக்கும், வங்காலை மகாவித்தியாலயத்துக்குமிடையில்வருகிற வாரமுற்பகுதியில் புனித சவேரியார் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப்போட்டிநடைபெறவிருக்கிறது.

இதற்கான முழு ஏற்பாட்டையும் மன்னார்புனித-சவேரியார் கல்லூரி அதிபர் வண-பிறதர்- யோசவ்கிலாறி செய்து வருகிறார்கள்.

— —

## நாரந்தனை கிளை

அல்லைப்பிட்டி, திங்கள்

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாரந்தனைக் கிளை அமைப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின் வருவோர் அலுவலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: த அருமைநாதர் துணைத்தலைவர்: க தியாகராசா, செயலாளர்: செ பே தம்பிராசா துணைச் செயலாளர். பா யேசுதாசர் பொருளாளர்: வே சிவகுரு 17 பேரைககொண்ட நிர்வாக சபையொன்றும் அமைக்கப்பட்டது.


115 — 117 கே. கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம். 1834

நடனமுருகன் மெடிக்கல் ஸ்ரோஸ், நெல்லியடி. 1836




அதன் காரணங்கள்:—

(அ) 'ரவி' முடி உயர்தரமான சின முடி அவை உலகிலேயே சிறந்தவை. உயர்ந்த ரக பிரஷ் தயாரிப்பாளர்கள் இதனையே பாவிக்கின்றனர்.

(ஆ) இம்முடிகள் பற்றிய இரண்டாம் குறிப்பு: ரவி பிரஷ்களில் அதிக முடிகளை அடக்கியுள்ளோம். வெறும் வேடிக்கைக்காக அல்ல. மிக நெருக்கமான முடிகள் உள்ள பிரஷ் அதிக அளவு வர்ணத்தை உள்ளடக்குவதால் வர்ணம் விரைவாகவும், மிருதுவாகவும் பரவுகின்றது.

(இ) 'ரவியின்' தகடுகள் உருக்காளாக்கி நிக்கல் பூசப்பெற்றவை. முடிகளை உறுதியாகப் பற்றிக் கொள்பவை. இக்காரணத்தினுல் சுவர்களில் 'ரவியினுல்' வர்ணம் தீட்டும் பொழுதும் வேறு வர்ண வேலைகள் செய்யும் பொழுதும் கழன்ற முடிகளையோ அல்லது கீற்றின் அடையாளங்களையோ காண்பதில்லை.

(ஈ) 'ரவியின்' கைப்பிடி பலம் வாய்ந்தது. நல்லுருவம் அமைந்தது. அத்துடன் அதன் தரம் ஒரு காலும் குறையாதது.

இவைகள் எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துக் கூறினுல் 'ரவி' உங்களுக்குப் பொருள் ஈட்டுகின்றது. வேறு விதமாகக் கூறினுல் வர்ணம் தீட்டும் வேலையைக் குறைந்த செலவில் செய்ய உதவுகின்றது.

ஆகவே "ரவியை" கேட்டு வாங்குங்கள்.

ரவி

RI7-69-MASTERS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பல்லோ - 12 வீரர்கள்

# விண்வெளியில் இருந்தபடி நிருபர்களுக்கு பேட்டி

## பல தகவல்களை தெரிவித்தனர்

ஹூஸ்டன், நவ. 24

**விண்வெளியில் இருந்தபடியே பத்திரிகை நிருபர்கள் மாநாடொன்றை முதல் தடவையாக இன்று அதிகாலையில் அப்பல்லோ-12 வீரர்கள் சார்ள்ஸ் கொன்ராட், அலன் பீன், ரிச்சார்ட் கோர்டன் ஆகிய மூவரும் நடத்தினார்கள்.**

பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விகளை ஹூஸ்டன் தரை கட்டுப்பாட்டதிகாரிகளால் விண்வெளி வீரர்களுக்கு வாசித்துக்காண்பிக்கப்பட்டன. அவைகளுக்கு விண்வெளி வீரர்கள் பதிலளித்தார்கள்.

சந்திரனில் இறங்கியது பற்றிய கேள்விகளுக்கு சார்ள்ஸ் கொன்ராடும் அலன் பீனும் பதிலளிக்கையில், சந்திரத்தரையில் இருந்த பொழுது தாங்கள் மகிழ்ச்சியோடு அனுபவித்ததாகவும் அங்கு வேலைசெய்வதுமிகவும் எளிதாகவிருந்ததாகவும் கூறினார்கள்.

கற்களையும் பாறைகளையும் இனம் கண்டுபிடிப்பது கடினமாக விருந்ததென்றும் அங்கு பாவித்த உபகருவிகளால் சங்கடம் ஏற்பட்டதாகவும் அவர்கள் கூறினார்கள்.

சந்திரனில் நடப்பதை இன்னும் அதிக நேரம் வைத்துக்கொள்ளலாம் ஆனால் சந்திரப் புழுதி தாய்க்கலத்துக்குள் வந்துவிடுவதுபற்றி ஏதாவது தடுப்பு ஏற்பாடுசெய்ய வேண்டும் என்று அவர்கள் இருவரும் கருத்து வெளியிட்டனர்.

தாய்க்கப்பலை செலுத்துபவரான திரு. ரிச்சார்ட் கோர்டன்கேள்விகளுக்கு பதிலளிக்கையில், சந்திரனின் இருள் பகுதிக்குள் போகும்போது எப்படியிருக்குமோவென்று முதலில் யோசித்ததாகவும் ஆனால் அங்குசென்றபின்னர் அதைப்பற்றிக் கவலைப்படவில்லையென்றும் குறிப்பிட்டார்.

அப்பல்லோ-12 கலம் பூமியிலிருந்து சுமார் ஒரு லட்சம் மைல் தொலைவிலிருக்கும்போது வீரர்கள்தொலைக்காட்சியொன்றை நடத்தினார்கள். இதுவேஅவர்களின் கடைசித் தொலைக்காட்சியாகும்.

இன்று கலத்தை பூமியை நோக்கியபாதையில் சரியாகத்திருப்புவதற்காக நடத்தப்படவிருந்த ஒரு திருத்தம் ரத்துசெய்யப்பட்டது. கலம் பூமியை நோக்கிய பாதையில் சரியான திசையில் வந்துகொண்டிருப்பதே இதற்குக் காரணம்.

### தமிழ்நாட்டிலிருந்து கலந்து கொண்டவர்கள்

சென்னை, நவ. 24

புதுடில்லியில்நடைபெற்ற இந்திரா ஆதரவு அ.பா.கா. கமிட்டிக் கூட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து கலந்து கொண்டவர்கள் பின்வருமாறு திரு. பக்தவத்சலம், பூவராகன், மன்றாடியார், ஆர்.வி.சாமிநாதன், கண்ணதாஸன், தஞ்சை ராமமூர்த்தி, கே. டி. கோசல்ராம், தமிழ்செல்வன். எஸ்.எல். கிருஷ்ணமூர்த்தி, ஓ. பி. சி வீரபாகு, ஜீவரத்தினம், விஜயராஜ், ராஜ்கோபால் ராமலிங்கம், பட்டுக் கோட்டைசண்முகம்.

### வர்த்தக ஊழியர் சங்கக் கிளை

ஊரதீவு, திங்கள்

காரைநகர் நோர்வேய மீன்பிடி முன்னேற்றத் தொழிற்சாலையில் கடமையாற்றும் சகல ஊழியர்களினதும் நலனைப் பாதுகாப்பதற்கென இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் கிளையொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் ஸ்ரீ சுப்பிரமணிய கோயில் மைதானத்தில் திரு எம், யோகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புதுவருட உறுப்பினர் தெரிவின்போது தலைவராக எம். யோகலிங்கமும் உப தலைவராக ரி. ராசேந்திரனும், செயலாளராக அ. சதாசிவமும் உப செயலாளராக மு. செந்திவேலும் பொருளாளராக சி. [illegible] தெரிவு செய்யப்பட்டனர்.

—

# "தலை போனாலும் விலை போகாதாம்"


## தி. மு. க. பற்றி கருணாநிதி

சென்னை, நவ. 24

முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கு வெள்ளி வீரவாள் பரிசளிக்கும் விழா முதுகுளத்தூர் அண்ணா திடலில் நடந்தது. இவ் விழாவில் கலந்து உரையாற்றிய திரு. கருணாநிதி தமதுரையில், "காந்தி சாகும்போது காங்கிரசை கலைக்கச்சொன்னார். அப்போது மறுத்தார்கள். ஆனால் காந்தி நூற்றாண்டான இந்த நேரத்தில் காங்கிரசை கலைத்தே விட்டார்கள். கேலி, கிண்டல் ஏளனத்திற்கு உள்ளாகி விட்டது காங்கிரஸ். இதில் நொந்து போன ராஜாஜி, பிலுமோடி போன்றவர்கள் தி மு க. கட்சியை காங்கிரஸ் விலை பேசிவிட்டது எனக் கூறுகிறார்கள். ராஜாஜி இது குறித்து மறைமுகமாக கட்டுரை எழுதியுள்ளார். தி மு க. தலை போனாலும் விலைபோகும் கட்சி அல்லஎன்றார், ராஜாஜி போன்ற பெரியவர்கள் இவ்வாறு எழுதுவது குறித்து தான் வேதனை அடைவதாகவும் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

இன்றைய சூழ்நிலையில் திருமதி இந்திராகாந்திக்கு நாம் கொடுக்கும் ஆதரவு தற்காலிகமானதே நிரந்தரமானது அல்ல. இதை பயன் படுத்தி தமிழ் நாட்டில் 'இந்தி'யைத் திணிக்கநினைத்தால் பெரும் போராட்டம் தொடங்க தயங்க மாட்டோம்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கோரி வருகிறோம் இதுபற்றி 3 பேர் கொண்ட குழு பரிசீலனை செய்து வருகிறது. அந்த குழுவின் சிபாரிசுகளை டில்லி அரசாங்கம் மதித்து ஏற்காவிட்டால் மத்திய அரசை எதிர்த்து மாநில சுயாட்சி போராட்டம் தொடங்குவோம்.



# சாகித்திய மண்டல தமிழ் இலக்கியவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை சாகித்திய மண்டலத்தின் தமிழ் இலக்கிய விழா அடுத்த திங்கட்கிழமை கொழும்பு தேஸ்றன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இவ்விழாவுக்கு வித்வான் ந. சுப்பையா பிள்ளை தலைமை தாங்குவார். சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்புப் பதம் பெற்றதற்கு வித்துவான் சுப்பையாபிள்ளைக்கு இவ்விழாவிலேயே பாராட்டும் வழங்கப்படும்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் கலாநிதி கா. குலரத்தினம், வி. செல்வநாயகம், கலாநிதி ஆ. சதாசிவம், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சோ. நட. ராசா, செ. வேலாயுதபிள்ளை, ஒய்வு பெற்ற கல்வி அதிகாரி திருமதி ஆர். ஆர். நவரத்தினம், டாக்டர் வி. சற்குணநாயகம், செல்வி ஆசாரியா ஜமீலா திருவாளர்கள் ஆர். கந்தையா, எஸ். எம். கமாலத்தீன் ஆகியோர் இங்கு பல்வேறு பொருள்கள் பற்றியும் சொற்பொழி

—

# எகிப்திய நிலைகள்மீது இஸ்ரேலியர்கடும்தாக்குதல்

கெய்ரோ, நவ. 24

ஐக்கிய அரபுக் குடியரசு ராணுவநிலைகள் மீது நேற்று இஸ்ரேலிய விமானங்கள் சுமார் நான்கு மணி நேரம் கடும்தாக்குதல்களை நடத்தின. ஆனால் இந்தத் தாக்குதல்களை அரபுத்தரப்பினர் முறியடித்ததாகவும் இஸ்ரேலிய விமானங்கள் துரத்தி அறிவிக்கப்பட்டது.

நேற்று ஐக்கிய அரபு ராணுவ அணியொன்று இரண்டாவது தடவையாக சுயேஸ்கால்வாய்க்கு குறுக்கே இஸ்ரேலிய பகுதியில் ஊடுருவிச் சென்று பலத்த தாக்குதல்களை நடத்திவிட்டுத்திரும்பியதாக கெய்ரோவில் அறிவிக்கப்பட்டது.

...தைக் கவிழ்ப்பதற்கு சதி செய்த குற்றத்தின்மீது பழைய ராணுவ வீரரான இவர் சிறைவைக்கப்பட்டிருந்தாராம். சிறைக்காவலாளிகளுடன் மோதி ரிவால்வர்களையும், துப்பாக்கிகளையும் கைப்பற்றிக்கொண்டு இவர் வெளியேறியதாகவும் வெளியில் இன்னும் பலர்

—

ஆசிரியர்கள் பிரச்னை தீரவழி:

# உள்ளூராட்சி மன்றங்களுடன் கல்வி இலாகாவை இணைக்க வேண்டும்

## — திரு. ஜி ஜி. பொன்னம்பலம்

கொழும்பு, திங்கள்

"இந் நாட்டிலுள்ள ஆசிரியர்களின் பிரச்னைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன, அவர்களது கஷ்டங்களைப்போக்க கல்வித்திணைக்களம் தவறிவிட்டது. கல்வி இலாகாவில் உள்ள ஒருசில அதிகாரிகளால் சுமார் ஒன்றேகால் லட்சம் ஆசிரியர்களின் பிரச்னைகளைக் கவனிக்க முடியாது. ஆசிரியசேவைக்

தேசீய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் ஆசிரியர்கள் விரக்தியடைந்துள்ளனரென்று கூறிய அவர் கல்வி இலாகாவின் புறக்கணிப்பே இதற்குக் காரணமென்றும் சொன்னார்.

அகிலஇலங்கை சுவீகரிக்கப்பெற்ற தமிழ்ப்பாடசாலைகள் ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. திருநாவுக்கரசன் பேசுகையில் கல்வியமைச்சு தான் வகுத்த

திரு. முத்துச்சாமி தமது தலைமையுரையில் வெளிமாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் கஷ்டங்களை எடுத்துரைத்தார்.

திரு. எஸ் தாமோதரம் பிள்ளை உட்பட மற்றும் பலரும் பேசினர். ஈற்றில் திரு. செ. வரதலிங்கம் நன்றி கூறினார்.

—

### திருவாசக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய அரபுக் குடியரசு ராணுவநிலைகள் மீது நேற்று இஸ்ரேலிய விமானங்கள் சுமார் நான்கு மணி நேரம் கடும்தாக்குதல்களை நடத்தின. ஆனால் இந்தத் தாக்குதல்களை அரபுத்தரப்பினர் முறியடித்ததாகவும் இஸ்ரேலிய விமானங்கள் துரத்தியடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய விமானங்கள் அல்கன்ட்டாரா பகுதியில் இந்தக்கடும் தாக்குதல்களை நடத்தியதாக டெல்அவிவில் அறிவிக்கப்பட்டது.

நேற்று ஐக்கிய அரபு ராணுவ அணியொன்று இரண்டாவது தடவையாக சூயேஸ்கால்வாய்க்கு குறுக்கே இஸ்ரேலிய பகுதியில் ஊடுருவிச் சென்று பலத்த தாக்குதல்களை நடத்திவிட்டுத்தி..ம்பியதாக கெய்ரோவில் அறிவிக்கப்பட்டது.

லெபனனில் பயங்கரகைதியொருவர் சிறையிலிருந்து தப்பியோடுகையில் மடக்கிப் பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கத் செய்த குற்றத்தின்மீது பழைய ராணுவ வீரரான இவர் சிறைவைக்கப்பட்டிருந்தாராம். சிறைக்காவலாளிகளுடன் மோதி ரிவால்வர்களையும், துப்பாக்கிகளையும் கைப்பற்றிக்கொண்டு இவர் வெளியேறியதாகவும் வெளியில் இன்னும் பலர் இவருடன் சேர்ந்துகொண்டதாகவும் கூறப்பட்டது. பிறகு அவர் சுட்டு வீழ்த்தப்பட்டு கைதுசெய்யப்பட்டார்.

...தலைவராக எம். ... கமும் உப தலைவராக ரி. ராசேந்திரனும், செயலாளராக அ. சதாசிவமும் உப செயலாளராக மு. செந்திவேலும் பொருளாளராக சி. குலசேகரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

— —

தேவர்கல்லூரிக்கு

## கருணாநிதி அடிக்கல் நாட்டினார்

மதுரை' நவ. 24

காலஞ்சென்ற 'போர்வர்ட் பிளக்' கட்சித்தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவரின் பெயரில் அவரது சொந்த ஊரான பசும் பொன் கிராமத்தில் கட்டப்படவிருக்கும் கல்லூரிக்கு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அடிக்கல் நாட்டினார். மதுரை நகரசபைத்தலைவர் திரு. எஸ் முத்து. இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க செயலாளர் தென்னரசு, மதுரைப்பல்கலைக்கழக துணை வேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

## நூல் வெளியீடு

சுழிபுரம் திங்கள்

பண்ணாகம் தெற்கைச் சேர்ந்த செல்வன் ஆ. சேயோன் எழுதிய விடுதலை வேட்கை' என்னும் நூல் இவ்வார பிற்பகுதியில்வெளியிட்டு வைக்கப்படவிருக்கிறது

...வண்ணமிருக்கின்றன, அவர்களது கஷ்டங்களைப்போக்க கல்வித்திணைக்களம் தவறிவிட்டது. கல்வி இலாகாவில் உள்ள ஒருசில அதிகாரிகளால் சுமார் ஒன்றேகால் லட்சம் ஆசிரியர்களின் பிரச்னைகளைக் கவனிக்க முடியாது. ஆசிரியசேவைக் கமிஷன் ஒன்றை உருவாக்கியதன்மூலம் ஆசிரியர்களின் பிரச்னைகளைக் கவனிக்க வேண்டும். கல்வியமைச்சர் தாமதமின்றி இதனை உணர்ந்து செயலில் . இறங்க வேண்டும்''.

இவ்வாறு தமிழ்க்காங்கிரஸ் தலைவரும், யாழ்ப்பாணம் எம் பி. யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கொழும்பு வை எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற ஆசிரியர் கருத்தரங்கில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அகிலஇலங்கை சுவீகரிக்கப்பெற்ற தமிழ்ப்பாடசாலைகள் ஆசிரியசங்க மேல் மாகாணச் சபையினரால் நடத்தப்பட்ட இக் கருத்தரங்கிற்குக் கிளைத் தலைவர் திரு. தி. க. முத்துச்சாமி தலைமைவகித்தார்.

திரு. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் ஆசிரியர்களின் பிரதிநிதியொருவர் ஆட்சிமன்றத்தில் இடம்பெற்றால் ஆசிரியர்களின் கஷ்டங்கள் தீர வழிபிறக்கும் என்றார்.

அவர் மேலும் பேசுகையில், முன்னேற்றமான நாடுகளில் கல்வி நிர்வாகம் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டுச் சிறந்த முறையில்செயற்படுத்தப்பட்டு வருகின்றது, இந்த முறையை நமதுநாடும் பின்பற்றவேண்டும். இப்படிச்செய்தால் இந்தநாட்டில் ஆசிரியர் இடமாற்றம் என்ற பிரச்னையே தலைதூக்கமாட்டாது என்றார்.

திரு. த. துரைசிங்கம் பேசுகையில் இயங்காதிருக்கும் ஆசிரியர் இடமாற்றச் சபையை மீண்டும் இயங்கச் செய்யவேண்டுமென்றும், கல்வியமைச்சர் ஆசிரிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க முன்வரவேண்டும் என்றும் கூறினார்.

கல்வி இலாகாவின் புறக்கணிப்பே இதற்குக் காரணமென்றும் சொன்னார்.

அகிலஇலங்கை சுவீகரிக்கப்பெற்ற தமிழ்ப்பாடசாலைகள் ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. திருநாவுக்கரசன் பேசுகையில் கல்வியமைச்சு தான் வகுத்த திட்டங்களையே மீறி நடக்கிறதென்றும், கணவன் காலியிலும் மனைவி காங்கேசன்துறையிலும் கடமையாற்றும்படி நிர்ப்பதிக்கப்படுகிறார்களென்றும், இதனைக் கல்வியமைச்சு மாற்றுதவரை ஆசிரியர்களின் ஒத்துழைப்பு ஒருபோதுமே கிட்டாதென்றும் சொன்னார்.

...கள் எடுத்துரைத்தார்.

திரு. எஸ் தாமோதரம் பிள்ளை உட்பட மற்றும் பலரும் பேசினர். ஈற்றில் திரு. செ. வரதலிங்கம் நன்றி கூறினார்.

— —

## திருவாசக ஆராய்ச்சி

முசலி, திங்கள்

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் திருவாசக ஆராய்ச்சி சொற்பொழிவுகளை வருகிற மாதத்தில் நடாத்துவதென்று கொழும்பு திருவாசக ஆராய்ச்சிச்சபை முடிவு செய்துள்ளது.

...டர் வி. சற்குணநாயகம், செல்வி ஆசாரியா ஜமீலா திருவாளர்கள் ஆர். கந்தையா, எஸ். எம். கமாலத்தீன் ஆகியோர் இங்கு பல்வேறு பொருள்கள் பற்றியும் சொற்பொழிவாற்றுவர்.

1969-ம் ஆண்டு சாகித்தியமண்டல பரிசு பெற்றவர்கள் இவ்விழாவில் பாராட்டப்படுவார்கள்.

(கா. நி.(

# 'அவர்கள் செய்த தீர்மானம் என்னைக் கட்டுப்படுத்தாது'

## நிஜலிங்கப்பா கூறுகிறார்

**புதுடில்லி, நவ. 24**

**கட்சியில் எவ்வளவுதான் அங்கத்தவர்கள் எண்ணிக்கை குறைந்தபோதிலும் காங்கிரஸ் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் தாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லையென்று திரு. நிஜலிங்கப்பா கூறினார்.**

கட்சியின் தலைவர் பதவியிலிருந்து இந்திரா ஆதரவாளர்கள் நடத்தப்பட்ட அகில பாரத காங்கிரஸ் கமிட்டி நீக்கியிருப்பது தம்மைக் கட்டுப்படுத்தமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில் அவர் மேலும் பேசுகையில் அந்தக் கூட்டம் சட்டப்படி கூட்டப் பட்டதல்லவென்றும் தம்மைத் தெரிவு செய்த டெலிகேட்டுகளால் மட்டுமே பதவியிலிருந்து நீக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

நேத்தாஜி சுபாஸ்சந்திர போஸ், திரு. கிடுபளானி, புருஷோத்ததாஸ் தாண்டன் போன்றவர்களைப் போல் நீங்கள் ஏன் பதவியிலிருந்து விலக்கவில்லையென்று நிருபர்கள் கேட்டதற்கு அப்போதைய நிலைமைகளுக்கும் இப்போதைய நிலைமைகளுக்கும் நிறைய வேறுபாடு இருப்பதாக திரு, நிஜலிங்கப்பா கூறினார்.

## கோவிலுக்கு சின்னப்பாதேவர் நன்கொடை

சென்னை, நவ. 24

கோவையிலுள்ள முருகன் கோவிலுக்கு பட அதிபர் சின்னப்பதேவர் இரண்டுலட்சம் ரூபாய் நன்கொடையளித்திருக்கிறார் கோவைக்கருகிலுள்ள மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோவில்ராஜ் கோபுர கட்டிடவேலையை திரு. சின்னப்பதேவர் ஆரம்பித்துவைத்தார் இதற்காகவே அவர் இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்தார்.

## சோஷலிஸத்தை மக்கள்தான் விரும்புகின்றார்கள்

''சோசலிஷத்தை மக்கள்தான் விரும்புகிறார்கள் மக்கள் குரலுக்கு செவி சாய்க்காத எந்தக் கட்சியும் நிலைத்து நிற்க முடியாது.''

இவ்வாறு பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி நேற்று செங்கோட்டைக்கு அருகில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார். இந்திரா சார்பு காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. சி. சுப்பிரமணியத்தின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பழைய சிந்தனைகள். சாதி வேறுபாடுகள், மூடநம்பிக்கைகள் போன்றவற்றிலிருந்து மக்கள் விடுதலை பெறவேண்டும். அதற்காக நாம் உழைக்கவேண்டும் என்றார் பிரதமர். செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமிடையிலான இடைவெளியைக் குறைத்தாகவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார்.

திரு. சுப்பிரமணியம் பேசுகையில், முன்னேற்றத்தை விரும்பும் சக்திகளுக்கு பிரதிநிதியாக திருமதி காந்தி விளங்குகிறார் என்றார். சின்டிக்கேட் தலைவர்களை அவர் குறிப்பிடுகையில் அவர்கள் பிற்போக்கு பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

அகில பாரத காங்கிரஸ் கட்சியின் பொதுக்காரியதரிசிகளாக திரு. சங்கர் தயாள்சர்மாவையும், திரு. பகுதினாவையும் இடைக்காலத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் நியமித்திருக்கிறார். திரு. உமாசங்கர் தீட்சிப் பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ராஜ்யங்களிலும் காங்கிரஸ் கமிட்டிகள் திருத்தியமைக்கப்படுமாவென்று நிருபர்கள் திரு. சுப்பிரமணியத்தை வினவியபோது அப்படியொரு யோசனையிருப்பதாக அவர் கூறினார்.

பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் காங்கிரஸில் இரண்டு பிரிவுகள் இருப்பதை எவரும் மறுக்கமுடியாது என்றும் ஆனால் எது சரியான கட்சியோ அதனை நோக்கி மக்கள் போவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## காங்கிரஸ் சமரசத்துக்கு டி. டி. கே. முயற்சி

புதுடெல்லி, திங்கள்

'காங்கிரஸ் கட்சியிலிருந்து இந்திரா காந்தியை விலக்கியது தவறு எனக் குறிப்பிட்டுள்ள திரு டி.டி. கிருஷ்ணமாச்சாரி பிரதம மந்திரிக்கும் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களுக்கும் சமரசம் செய்துவைக்கும் முகமாக 4 முக்கிய கருத்துக்களை இரண்டு தரப்பினரிடமும் வெளியிட்டுள்ளார். அவை வருமாறு:

1. காரியக் கமிட்டியில் குறைந்த பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு பாரபட்சமான முறையில் பிரதமர் இந்திராவை காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்குவதற்கு சின்டிகேட் தலைவர்களுக்கு உரிமையில்லை.


2, புதுடில்லியில் காங்கிரஸ் உடைந்துவிட்டதால் திருமதி இந்திராவின் அரசாங்கம் நீண்ட நாட்களுக்கு ஆட்சியில் நீடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இடைத்தேர்தல் நடத்த வேண்டிவரும்.

3. காங்கிரஸில் ஒற்றுமை ஏற்படாவிட்டால் அடுத்த தேர்தலில் அது படுதோல்வி அடையும். தெற்கே தி மு. கழகமும் வடக்கே ஜனசங்கமும்தான் வெற்றிபெறும்.

4. அடுக்கடுக்கான இந்த விளைவுகளை தவிர்க்க பிரதமரும் சின்டிகேட் தலைவர்களும் நடந்தவற்றைமறந்துவிட்டு இந்தக் கடைசி நிமிடத்திலாவது சமரசத்துக்கு வரவேண்டும்.

சமரசத்தைக் குறிக்கும் முதல் நடவடிக்கையாக காரியகமிட்டியின் அவசர கூட்டத்தை கூட்டி இந்திராவை விலக்கிய நடவடிக்கையை வாபஸ் பெறலாம் என்றும் இந்தக் கூட்டத்தில் தானும் கலந்து கொள்ளத்தயார் என்றுசின்டிகேட் தலைவர்களிடம் கேட்டுள்ளார்.


ஒரு பெரும் உபயோகங்கள்
பாரமற்ற ஒருபொறியில்




ஏர்ஜன்ட்
உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.
சக்திச் செறிந்த கச்சிதமான ஒரு பொறியில் சிவிறியும் துடைப்பமும் ஒருங்கே அமைந்துள்ளது. 6 மாத உத்தரவாதமுள்ள இயந்திரத்துடன் குறைந்த எரிபொருள் செலவில் அதி சிறந்த செயற் திறன் கொண்டது துளிகள் திட்டமாக ஒரே சீராக விழுகின்றன. ரூ. 1175/-
இலங்கையில் உற்பத்தி செய்வோர்:
HAYLEYS
ஹேலீஸ் லிமிட்டட்
400, டீன்ஸ் ரோட் கொழும்பு-10. தொலைபேசி: 96333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'காற்றும் நீரும் இல்லாமல் நான் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அந்தப் பரம் பொருளில்லாமல் நான் இருக்க முடியாது. — மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 10-ந் திகதி (25-11-69)

## குடியிருப்பவருக்குப் புதிய ஆபத்து

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த புதிதில் தொழில் அமைச்சர் ஒரு வாக்குறுதியளித்தார். அதாவது ஒருவர் ஒரு வீட்டிலே இருபது வருடமாகக் குடியிருந்து வாடகையை ஒழுங்காகச் செலுத்திவந்திருந்தால், அவ் வீடு அவருக்கே சொந்தமாகும்படி செய்ய ஒரு சட்டம் கொண்டுவரப்போவதாக அறிவித்தார் அதாவது, அந்த இருபது வருடங்களில் செலுத்தப்பட்ட வாடகை, அந்த வீட்டின் மதிப்புக்குச் சமமாகுமென்று கருதி குடியிருக்கும் குடும்பத்துக்கு அவ்வீடு உரிமையாக்கப்படுமென்றார்.

ஆனால் அமைச்சர் அளித்த இந்லவாக்குறுதி நீர்மேலெழுத்தாகிவிட்டது இந்த அரசாங்கத்தின் ஆயுட்காலம் இன்னும் சில மாதங்கள் தாம். என்றாலும் இதைப் பற்றிஅந்த அமைச்சர் உள்ளிட்டு யாரும் எதுவும் பேசக்காணோம். வருடக்கணக்காக வாடகை செலுத்தி குடியிருந்துவரும் குடும்பங்களுக்கு இது எவ்வளவு ஏமாற்றமென்பதை விளக்கத்தேவையில்லை. இவ்விஷயமாக இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன?

பல வீடுகள் கட்டி, பெருந்தொகைகளை வாடகையாகப் பெற்றுவரும் பெரும் பணக்காரர்களுக்கு இது பிடிக்காதுதான். என்றாலும் இந்த அரசாங்கம், ஒருசில பணமுடைகளின் நன்மையைப் பாதுகாக்கப் போகிறதா அல்லது லட்சக்கணக்கான பொதுமக்களின் நன்மையையா!

வாடகை கட்டுப்பாட்டுச் சட்டம், ஒருவீட்டில் குடியிருந்துவரும் குடும்பத்தை அனுவசியமாக வெளியேற்றக்கூடாதென்றும், வாடகையை அதிகரிக்கக்கூடாதென்றும்பாதுகாப்பு அளித்துவருகின்றது இந்தப் பாதுகாப்பை மறைமுகமாக நீக்கிவிடும்படியான ஒரு புதிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத்துள்ள ஒரு செய்தி தெரி

யேற்றப்படுமென்று அஞ்சப்படுகிறது. குடியிருக்கும் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இவ்விதம் மறைமுகமாக நீக்கப்படுவதும், அதற்கு அரசாங்கமும் உடந்தையாக இருப்பதும் பொறுக்கமுடியாததாகும்.

குடியிருப்பவர்களே விலைக்கு வாங்கிவிடலாமே என்று கேட்கப்படலாம். விலைவாசிகள் உயர்ந்துவிட்ட இக்காலத்தில் நடுத்தர குடும்பங்கள் மிச்சம்ஏதும் பிடிப்பதென்பது குதிரைக்கொம்பு. கடன்படாமல் இருந்தாலே பெரியகாரியம். குடியிருக்கும் வீட்டை வங்கியில் ஈடுவைத்து கடன் வாங்கி, வீட்டை வாங்கி சொந்தக்காரராகிவிடலாமே என்று கேட்கலாம். ஆனால் ஐம்பது ரூபாப் வாடகையுள்ள வீட்டின் (தரையின்) மதிப்பு இப்போது பெரிதும் கூடிவிட்டதாகக் கூறி, அதையெல்லாம் அவ்வீட்டின் மீதே சுமத்தி 25 அல்லது 30 ஆயிரம் என்று விலை கூறுகிறார்களாம். வங்கியிலே இருபத்தையாயிரம் கடன் வாங்கினால் மாதா மாதம் சுமார் 180 ரூபாய் வட்டி செலுத்தவேண்டியிருக்கும், மாதம் ஐம்பது ரூபாய் வாடகை செலுத்தும் ஒரு நடுத்தர குடும்பம் எப்படி மாதம் 180 ரூபா வட்டிக்காகச் செலுத்தமுடியும்? சிலவருடங்களிலே வீட்டையும் இழந்து அந்தக் குடும்பம் தெருவில் நிற்கவேண்டியதுதான்.

இவ்விஷயத்தில் குடியிருப்பவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பெரும் கடமையாகும். அரசாங்கமே அவ் வீடுகளை வரிபாக்கிக்காக விலைக்கு வாங்கி, அக் குடும்பங்கள் தொடர்ந்து அங்கிருக்க அனுமதிக்கலாம். குடியிருப்பு திட்டப்படி அரசாங்கம் கட்டியுள்ள வீடுகளை இருபது வருடங்களுக்குப் பின், அங்கு குடியிருப்பவர்களுக்கே அரசாங்க உரிமையாக்குவதுபோல், தனிப்பட்டவர்கள் கட்டியுள்ள வீடு

# இலட்சக்கணக்கானோர் கட்டியெழுப்பிய காங்கிரஸ்

— ம. பொ. சி. —

காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா அந்தக் கட்சி இரண்டாக உடைபடக் காரணமாயிருக்கிறார். ஒரு கட்சியை கட்டி வளர்ப்பது கஷ்டம். உடைத்துப் போடுவது மிகமிகச் சுலபம். காங்கிரசைக் கட்டி வளர்க்கும் பணி சுமார் முக்கால் நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடந்தது. உடைக்கும் பணியோ ஒரே நாளில் நடந்துவிட்டது!

கட்டி வளர்த்தவர்கள் சாமான்யர்கள் அல்லர். கடவுளின் அவதாரமென மக்களால் கருதப்பட்ட காந்தியடிகளிலிருந்து கடைசித் தொண்டர்வரை இலட்சாதிலட்சம்பேர் அந்தமகாசபையைக் கட்டிவளர்க்கும் பணியிலே பங்குபெற்றனர், தங்களுடைய எலும்புகளைக் கற்களாக்கி இரத்தத்தை நீராக்கி சேறு குழைத்துக் கொடுத்து காங்கிரஸ் மாளிகையைக் கட்டி வளர்த்தனர்.

இப்படி இலட்சாதி லட்சம் பேரின் உழைப்பால் எழுந்த மாளிகையைநான்கு பேர் (சிண்டிகேட்டினர்) உடைத்தெறிந்து விட்டனர் அந்தத் திருப்பணியையும் காந்திஅடிகள் நூற்றாண்டு விழாவிலே நிறைவேற்றி முடித்திருக்கின்றனர்.

காங்கிரஸ் மகாசபை இந்தியாவிலுள்ள கட்சிகளிலே காலத்தால் முதலில் தோன்றிய கட்சி, வரலாற்றால் மூத்த கட்சி வழிகாட்டுவதிலே முன்னோடும் கட்சியாகவும் இருந்த பெருமை அதற்கு உண்டு.

உலக நாடுகளோடு ஒப்பிட்டு நோக்கினால் மிகப் பெரிய ஜன சமுத்திரத்தை படைத்த ஒருநாட்டிலே அறவழியில் நின்று— ஆயுத பலத்தை வெறுத்து இந்த நாட்டுக்கு விடுதலை தேடிய பெருமை காங்கிரஸ் கட்சி ஒன்றுக்கே உண்டு ஆனால் அந்த அறநெறியை— அகிம்சை வழியை— மாற்றாரிடமும் சகிப்புத் தன்மை காட்டும் மாண்பினை தங்களுக்குள்ளேயே காட்டிக் கொள்ளத் தவறி விட்டனர். இன்றுள்ள காங்கிரஸ் பெருந்தலைவர்கள். அதன் விளைவுதான் காங்கிரசில் ஏற்பட்டுள்ள பிளவு

இன்றைய காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா

பீடத்தில் இருந்தவர்களிலே வேறு எவருமே செய்ததில்லை. இவ்வளவு சிறுமைகளுக்கிடையேயும் திரு நிஜலிங்கப்பாவுக்கு ஒரு தனிப் பெருமையும் உண்டு. அது காங்கிரஸ கட்சியின் கடைசித் தலைவராகஇருந்த மகத்தான பெருமையாகும்.

நினைத்துப் பார்க்க முடியாத இன்னொரு கொடுமை நிகழ்ந்து விட்டது. விடுதலை வீரர்களின் பாசறையாகத் தோன்றிய காங்கிரஸ்விருட்சத்திற்கு முதன்முறையாக வித்து விழுந்தது சென்னை நகரிலாகும், முதல் காங்கிரசிலே முதல் தீர்மானத்தை

## நான்கு பேரால் உடைத்தெறியப்படுகிறது

பிரேரித்துப்பேசியவர் தென்நாட்டவரான திரு குத்தி கேசவப் பிள்ளையாவார்.

ஒரு பெண்மணியை காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பீடத்திலமர்த்திஅந்த மகாசபைக்கு பெருமை தேடிய உரிமையும் தென்னகத் திற்கு உண்டு ஆம்: சென்னை வாசியான அன்னிபெசன்ட் அம்மையார்தான் காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்த முதல் பெண்மணியாவார்.

ஒத்துழையாமை இயக்கம் அடிகளாரின் உள்ளத்தில் உருவானது அவர் சென்னை நகரில் தங்கியிருந்த போதாகும். ''தமிழகத்தின் தலைவரான ராஜாஜியோடு ஒரு மணிநேரம் உரையாடியதன் விளைவே ஒத்துழையாமை இயக்கத்தின் தோற்றம்'' என்றார் அடிகள்.

இப்படி, காங்கிரசைக் கட்டிவளர்த்ததிலே - அதன் பெருமைமிக்க வரலாற்றை அங்குலம் அங்குலமாக உருவாக்கியதிலே தென்னகமே முன்னோடியாக விளங்கியது. இதற்கு நேர்மாறாக, தென்னகத்தார் ஒருவர் தலைவராக இருக்கும்போதுதான், காங்கிரஸ்கட்சி அழிவு என்னும் படுகுழியில் தள்ளப்பட்டிருக்கிறது. ...த் தமிழர் ஒருவரும் அதற்குப் பக்கபலமாக இருந்துவிட்டார்.

தேசத்தின் மகாசபையாகிவிட முடியுமா? காங்கிரசையேகைப்பற்றிவிட அந்த ஒரு 'வாக்கு'போதுமா?

செயற்குழு உறுப்பினரிலே இந்திரா காந்தி தலைமையில் உள்ள பத்துப்பேரும் ஒரே வார்ப்படம்போல அமைந்துள்ளனர். தலைமைப் பதவியிலிருந்து திரு. நிஜலிங்கப்பாவை மாற்றவேண்டுமென்பதிலே அந்தப் பத்துபேரிடையே கருத்துவேற்றுமை இல்லை. திரு. நிஜலிங்கப்பாவின் தலைமையில் உள்ள 11 பேரிடம் அந்தக் கருத்தொற்றுமையைக் காணோம்.

திரு. கே சி. ஆபிரகாம் என்றகோள உறுப்பினர், இரண்டு கோஷ்டியின் கூட்டங்களிலுமே கலந்துகொண்டிருக்கிறார். ஆம்: பிரதமருக்கு விரோதியாகிவிட அவருக்குத்துணிவில்லை. அதனால் இவரில் ஒருவருக்குத் தொண்டராகவும் மற்றொருவருக்குத் துரோகியாகவும் இருப்பதைவிட, இருவருக்குமிடையே தூதுவராக நடிப்பதுதான் பாதுகாப்பான பணி என்று நினைக்கிறார் ஆபிரகாம்.

இந்த ஊசலாட்டப் பேர்வழியை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், நிஜலிங்கப்பா குழுவில் உள்ள எஞ்சிய 10 நபர்களிலே தற்காப்புக்காகப்போராடியவரும் திரு. காமராசரும், பதவியைப் பறித்தவரை பழி வாங்காமல் விடுவதில்லைஎன்ற விரதமெடுத்திருக்கும் மொரார்ஜி தேசாயுமே பிரதமரின் உண்மையான எதிரிகள்! மற்றுள்ளவர்கள்பிரதமர் பதவியிலிருந்து இந்திராவை வெளியேற்றுவதை விரும்பவில்லை அதனாற்றான், 'கலகக்கோஷ்டியின் தலைவர்'' எனப் பெயர் பெற்றுவிட்ட திருமதி இந்திரா மீது நடவடிக்கை எடுக்கும் துணிவு காங்கிரஸ் தலைவருக்கு ஏற்படவில்லை.

பிரதமர் குழுவிலிருந்து திரு நிஜலிங்கப்பாவிடம்

வோர் இவ்வளவு மோசமாக நடப்பார்கள் என்று நாம் நினைத்துப் பார்த்தது கூட இல்லை.

ஒருவர் கட்சிக் கட்டுப்பாட்டைமீறி நடக்கிறார் என்று தெரிந்தால், கட்சித் தலைவர் அவரை சஸ்பெண்ட் செய்வதற்கு காங்கிரஸ் அமைப்பு விதிகளிலே இடமிருக்கலாம் ஆனால் காங்கிரஸ் தலைவர் மேற்கொண்டது தற்காலிகமாக விலக்கி வைக்கும் (சஸ்பென்ட்) நடவடிக்கையல்ல. நிரந்தரமாகவே காரியக் குழுவிலிருந்து அவர்கள் நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவா, காந்தியம்?

ஆனால் நடந்தது என்ன? செயற்குழு கூடவிருந்த நேரம் நெருங்கிவரும் தருணத்திலே திரு. சி. சு வை அக்குழுவிலிருந்து நீக்கிவிட்டதாக நடப்பதெல்லாம் இருபதாண்டு காலத்திற்கு மேலாகத் தமிழ்நாடு காங்கிரசிலே நடந்துவருபவைதானே.

போகட்டும், திரு. நிஜலிங்கப்பாவின் தலைமையிலுள்ள எஞ்சிய காங்கிரஸ் இனி என்ன செய்யப்போகிறது? ஏற்கனவே காங்கிரஸ் முழுசாக இருந்தகாலத்திலேயே, கடந்த பொதுத் தேர்தலிலேயே அது படுதோல்விகண்டது இளந் துடிப்பு மிக்க ஒரு பகுதியை இழந்துவிட்ட பின்புள்ள இன்றைய 'எஞ்சிய காங்கிரஸ்' இனி உயிர் வாழ முடியுமா?

திரு. காமராசர், பிரதமர் இந்திரா குழுவினர் தனியாகிவிட்டபின்னரும், 'கூட்டுத் தலைமை' நீடிப்பதாகக் கூறுகிறார். இந்தக் கூட்டுத் தலைமை சாதித்தது என்ன?

நேரு மறைந்த பின்னர் அதுவரை திரைமறைவில் இயங்கிவந்த சின்டிகேட் தான் 'கூட்டுத் தலைமை' என்ற மாற்றுப் பெயர் பெற்று வெளிப்படையாக இயங்குகிறது.

இந்தக் கூட்டிலே இந்தியாவின் பிரதமர் ஒரு அங்கமாக இருக்கவில்லை - இருக்கவிடவில்லை சின்டிகேட் 'கனவான்கள்' ஆம்; லால்பகதூர் சாஸ்திரி காலத்திலும்தான்.

திரு காமராசர் குறிப்பிடும் கூட்டுத் தலைமை ஆட்சித் தலைமையைத் தன்னில் ஒரு அங்கமாகப் பெருததோடு அதற்குப் போட்டிக்

# ஜயாரன் எழுதுவது..

ஆவி உலகப் பேச்சைப் பற்றி பலகடிதங்கள்கிடைத்துக்கொண்டுள்ளன. சில ஆதரித்தும் சில எதிர்த்தும் வருகின்றன. இரண்டையும் வெளியிடவேண்டுமென்று கொழும்பிலுள்ள ஓர் அன்பர் கேட்டுள்ளார். அத்துடன் திரு கே. எம். முன்ஷி, தமது ''பலான்ஸ் ஜர்னல்'' என்ற சஞ்சிகையில் இதுகுறித்து ஓர் அன்பர் தம்மை எழுதிக் கேட்ட சந்தேகத்தையும், அதற்குத் தமது பதிலையும் வெளியிட்டுள்ளதை அனுப்பி வைத்து, அதையும் ''ஈழநாடு'' பத்திரிகையில் வெளியிடவேண்டுமென்கிறார்.

அந்த அன்பர். திரு. முன்ஷிக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:

எனக்கு விசித்திரமான அனுபவங்கள் ஏற்பட்டுவருகின்றன. சில சமயங்களில் அன்னை காளியும், ஸ்ரீ சங்கராச்சாரியாரும் என்னுடன் 'பிளான்செட்' எனும் பேசும்பலகை மூலம் பேசுகின்றார்கள். சில நாட்களுக்கு முன் ஒரு நண்பரை மீடியமாகக் கொண்டு அப்பலகைமுன் அமர்ந்தேன். காளிதேவியை அழைத்து, அத்துவைதம் பற்றிய விளக்கம் கேட்டேன். தனக்கு அது தெரியாதென்றும், சங்ராச்சாரியாரை எங்களிடம் அனுப்பி வைப்பதாகவும் பதில் கிடைத்தது. ''ராஞ்தென ஜயந்தி'' என்று சம்ஸ்கிருதத்தில் சொல்லிவிட்டுச்சென்றார், எனக்கு சம்ஸ்கிருதம் தெரியாது. பிரார்த்தனை செய்பவர்கள் வெல்லுவர் வெல்லுவர் என்பது அதன் பொருளென்று பின்னர் அறியவந்தேன்

பின்னர் சங்கராச்சாரியார் என்ற பெயர் பலகையில் வந்தது: எங்களது பல கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார். தெய்வமும், ஞானிகளும் இவ்வளவு சுலபமாகக் கிடைக்கிறார்களே என்று மிகவும் மகிழ்ந்தேன். இச்சந்தர்ப்பத்தைப் பெரிதும் பயன்படுத்தவிரும்பினேன். எனக்கு உபதேசிக்கும்படி அவரைக்கேட்டேன். அவர் உடன் ஒப்புக்கொண்டு, மறு ஞாயிறன்று பலகைமூலம்தம்மை அழைக்கச் சொன்னார்.

காளிதான் என்னை அதிகம் தொந்தரவு செய்கிறது ஏதேதோ கூச்சல்களைக்கேட்கிறேன். என்னைக்காளி கொல்ல முயலுவதாக அஞ்சு

சரணாகதி முதலியவை எல்லாம் அவசியமில்லாமற் போகுமே

மன்னிக்கவேண்டும். நீங்கள் ஆபத்தான வழியில் செல்லுவதாகத் தோன்றுகிறது உங்கள் நிலையில் நானிருப்பின் ஆவிகளை அழைக்கமாட்டேன். பேசும் பலகையை எறிந்துவிட்டு, பதஞ்சலி கூறியுள்ள கிரியா யோகத்தைப் பின்பற்றுவேன். ஒழுங்காக ஜபம் செய்யுங்கள். கீதை அல்லது வேறு வேதங்களைப் படியுங்கள். முருகன் அல்லதுவேறு உங்களுக்குப்பிடித்த மூர்த்தியிடம் சரணாகதியடையுங்கள்.

அசாதாரண சக்திகள் மூலம், கடவுளர்கள், மகாத்மாக்கள், சித்தர்கள் இவர்களுடன் தொடர்புகொள்ள முடியாதென்று நான் கூறவில்லை. அதற்கு நீண்டகால அப்பியாசமும் குரு உபதேசமும் தேவை. நீங்கள் சரியான வழியில் செல்வதற்கு ஓர் அடையாளம் என்னவென்றால், அத்தொடர்பால் உங்களுக்கு ஆனந்தமும், புது தைரியமும் ஏற்படும். பயமே இராது. அப்படி இன்றேல், உங்களை அந்த வழி தவறான திசையில் கொண்டு செல்கிறதென்றே கொள்ளவேண்டும்.

உங்கள் நிலையில் இருப்பின், நான் தனிஅறையில் இருந்து காலை, மாலை, மனமகிழ்ச்சியை வளர்க்கவும் பயம் கவலை முதலியவற்றைப் போக்கவும் முயலுவேன். பிரார்த்தனைசெய்து சாந்தியை வளர்ப்பேன். தியானத்தின் முதல்படி இது. அந்த சாந்தி அதாவதுஆனந்தம் ஏற்பட்டதும், தெய்வத்துடன் தொடர்பு கொள்ளலாம் ஆனால் உங்கள்வழி முற்றிலும் தவறு. மன்னிக்கவும்.

உணவு, தூக்கம், கனவு, பொழுதுபோககு எல்லாவற்றிலும் நிதானமாக இருப்பதே மேல். கனவுகளின் அர்த்தத்தை அறிய முனையாததுடன், வாழ்க்கையில் நம்பிக்கையுடனிருக்க வேண்டும். இந்தவழியை 6 மாதம் பின்பற்றினால், மனம் சரியானவழியில் தெய்வத்தை நோக்கிச்செல்வதாக இருக்கும்''

0 0 0

கொழும்பிலிருந்து திரு. சி வே சிவ ஞானப்பிரகாசம் என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் 'செல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாதென்றும், வாடகையை அதிகரிக்கக்கூடாதென்றும்பாதுகாப்பு அளித்து வருகின்றது இந்தப் பாதுகாப்பை மறைமுகமாக நீக்கி விடும்படியான ஒரு புதிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத்துள்ள ஒரு செய்தி தெரிவிக்கின்றது. பல வருடங்களுக்கு முன்பாக, தலைநகரிலே ஓர் இடத்தை ஏலத்திலே மலிவான விலைக்கு எடுத்த ஒருவர் அங்கு சுமார் ஐம்பது வீடுகளைக் கட்டி, நடுத்தர குடும்பத்தாருக்கு வாடகைக்கு விட்டுள்ளார். அவர் சமீபத்தில் இறந்துவிடவே, அரசாங்கத்துக்கு வரியாகப் பெருந்தொகை செலுத்தவேண்டியிருப்பதாகக் கூறி, அவ் வீடுகளை தனித்தனியே விலைக்குவிற்க, ஏற்பாடாகிவருவதாயும், பணமுள்ளவர்கள் அதிக விலை கொடுத்து வாங்கினுல், ஏற்னகவே அங்கு வருடக்கணக்காகக் குடியிருந்துவரும் குடும்பங்கள் சட்டப்படி வெளி வாங்கி, அக் குடும்பங்கள் தொடர்ந்து அங்கிருக்க அனுமதிக்கலாம். குடியிருப்பு திட்டப்படி அரசாங்கம் கட்டியுள்ள வீடுகளை இருபது வருடங்களுக்குப் பின், அங்கு குடியிருப்பவர்களுக்கே அரசாங்க உரிமையாக்குவதுபோல், தனிப்பட்டவர்கள் கட்டியுள்ள வீடுகள் விஷயத்திலும் ஏன் செய்யப்படாது? எப்படியும் குடியிருப்போரை மறைமுகமாக வெளியேற்றப்படுவதாயின் அதற்கான பொறுப்பு அரசாங்கத்தின் தலையிலேயே சுமந்து, பொது மக்களின் வெறுப்புக்கும் அவநம்பிக்கைக்கும் அது பாத்திரமாகவேண்டியிருக்கும். பொதுத்தேர்தல் நெருங்கிவருவதால், இவ் விஷயத்தில் அரசாங்கம் அலட்சியமாக இராதென்றும் எப்படியும் குடியிருப்பவர்களின் நன்மையைப் பாதுகாக்குமென்றும் நம்புவோம்.

(6-ம் கலத் தொடர்ச்சி

காந்தி ஆனுல், ''கட்சிக் கட்டுப்பாடு'' என்னும் திரைக்குப் பின்னுலேயே அவருடைய எதிர்ப்புப்போர் நடந்து வந்தது

பொதுத் தேர்தலுக்குப் பிறகேனும் கூட்டுத்தலைமையின் 'குணம்' மாறியதா? காங்கிரஸ்கட்சி வலுப்பெற்றதா? இல்லை—இல்லை பொதுத் தேர்தலுக்குப் பின் மேலும் மேலும் காங்கிரசைப் பலவீனப்படுத்தி வந்தது கூட்டுத் தலைமை இது மேற்கு வங்கம்- உத்தரப்பிரதேசம்- பீகார்- பஞ்சாப் ஆகிய நான்கு மாநிலங்களில் நடந்த மறு தேர்தலிலே காங்கிரஸ் அடைந்தபடுதோல்விகளால் நிருபனமாகிவிட்டது காங்கிரசுக்கு விழுந்த இந்த மரண அடிக்குப் பிறகேனும் கூட்டுத் தலைமை தோன்றியிருக்க வேண்டும் அந்த மாறுதலைக்காணத்தான் திருமதிஇந்திராகாந்தி தமது எதிர்காலத்தையும் பயங்கர சோதனைக்குள்ளாக்கிக்கொண்டு கட்சித்தலைமையின் இரும்புக் கரத்திலிருந்து காங்கிரசை விடுவிகக முயன்ருர், அந்த முயற்சியும் காங்கிரஸ் படுகாயமடையக் காரணமாகிவிட்டது

இனி, அடுத்தபடி என்ன சற்றுபொறுத்திருந்து பார்ப்போம்!

## தீவுப்பகுதியில் பெரு வெள்ளம்

அல்லைப்பிட்டி, திங்கள்

தீவுப்பகுதியில் கடந்தஏழு நாட்களாக இடைவிடாது தொடர்ந்து பெய்து கொண்டுவரும்பெருமழையினுலும், பேய்க்காற்றினுலும் இப்பகுதியில் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளது. புங்குடுதீவு கடலோர குடியேற்றத்திட்டங்களும் வேலணை மேற்குப்பகுதியிலுள்ள வீடுகளும் இம்மழையினுலும், காற்றினுலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதி புகையிலைத்தோட்டங்களும், உப உணவுப்பயிர்த் தோட்டங்களும் நெல் வயல்களும் பெருவெள்ளத்தினுல் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

அல்லைப்பிட்டிக்கும், மண்டைதீவுச்சந்திக்கும் இடையே உள்ள பிரதான வீதியின் மேலால் பெருவெள்ளம் மேவிப்பாய் வதனுல் இப்பகுதிமக்கள்போக்குவரத்து கஷ்டம் அனுபவித்து வருகின்றனர்.

—

## கிளைகள்

ஊரதீவு, திங்கள்

தமிழர் சுயாட்சிக்கழகத்தின்கிளைகள்இம்மாதம்26 ம் திகதி, 28-ம்திகதிகளில் நெடுந்தீவு, நயினுதீவு ஆகியஇடங்களில் நிறுவப்படவுள்ளன.

காட்டும் மாண்பினை தங்களுக்குள்ளேயே காட்டிக்கொள்ளத் தவறி விட்டனர். இன்றுள்ள காங்கிரஸ் பெருந்தலைவர்கள். அதன் விளைவுதான் காங்கிரசில் ஏற்பட்டுள்ள பிளவு

இன்றைய காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா இந்தியாவின் எதிர்காலத் தலைமுறையினரால் பாராட்டப்படமாட்டார்

ஒரு கட்சியின் தலைவராக இருப்பவர் அக் கட்சியிலே உருவாகும்எந்தஒருகோஷ்டியோடும் இணைந்து விடாமல் நடுவு நிலைமையுடன் செயல்படுவராக இருக்க வேண்டும், திரு நிஜலிங்கப்பா அந்த நடுவுநிலைமையில் என்றுமே இருக்கவில்லை

துவக்கத்திலே சின்டிகேட்டுக்கு எதிரான இந்திரா கோஷ்டியின் நம்பிக்கையைப் பெற்று காங்கிரஷ்கட்சியின் தலைவரானுர். இன்றே இந்திரா கோஷ்டிக்கு எதிராக சின்டிகேட் கோஷ்டியின் தலைவராகிவிட்டார்.

இன்று 'காங்கிரஸ்' என்பதன் மற்ருெரு பெயர் சின்டிகேட் என்ருகிவிட்டது. திரு நிஜலிங்கப்பா செய்த இவ்வளவு மாபெரும் தவறினை இதற்கு முன்பு காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் வாக்கியதிலே தென்னகமே முன்னேடியாக விளங்கியது. இதற்கு நேர்மாருக, தென்னகத்தார் ஒருவர் தலைவராக இருக்கும்போதுதான், காங்கிரஸ்கட்சி அழிவு என்னும் படுகுழியில்தள்ளப்பட்டிருக்கிறது. பச்சைத் தமிழர் ஒருவரும் அதற்குப் பக்கபலமாக இருந்துவிட்டார். இந்த மாபாவத்திற்காக, தேசபக்திமிகுந்த இந்திய சமுதாயத்தின் முன்னே தலைகுனிய வேண்டியதாகிவிட்டதுதென்னகம்.

''தலைமை'' எனும் தாலி கழுத்தில் இருந்த காரணத்தால் திரு. நிஜலிங்கப்பாவின் தலைமையில் கூடிய கோஷ்டியினர் 'கற்பு' முத்திரை உடையவர்களாகி விட்டனர். காங்கிரஸ்செயற்குழுவினர் இருபத்தொரு பேரிலே திரு. நிஜலிங்கப்பாவின் தலைமையில் கூடியோர் பதினெருபேர். இந்திராவின் தலைமையில் கூடியோர்பத்து பேர். ஒருவர், அதிகப்படியாக நிஜலிங்கப்பாவைச் சார்ந்துவிட்டதால் 'பெரும்பான்மை' கிடைத்திருக்கலாம் ஆனுல் அதனுல் நிஜலிங்கப்பாவின் தலைமையில் உள்ள ''எஞ்சிய காங்கிரஸ்''

அதனுற்ருன், 'கலகக்கோஷ்டியின் தலைவர்'' எனப் பெயர் பெற்றுவிட்ட திருமதி இந்திரா மீது நடவடிக்கை எடுக்கும் துணிவு காங்கிரஸ் தலைவருக்கு ஏற்படவில்லை.

பிரதமர் குழுவிலிருந்து திரு நிஜலிங்கப்பாவிடம் தூது போகஒருவர்கூட முன்வரவில்லை. திரு. நிஜலிங்கப்பா குழுவிலோ அவரது சொந்த மாநிலத்தின் முதல்வரான திரு. வீரேந்திர பட்டீலே பிரதமரிடம் தூது போகிருர்!

திரு நிஜலிங்கப்பா அனுமதித்தால்-இல்லையேல், பிரதமர் இந்திரா காந்தி அழைப்பு விடுத்தால் அவர்கள் இருவருக்குமிடையே நூதுவாக திரு. காமராசருக்கு விருப்பம்தான்.

இந்த ஊசலாட்டக் கோஷ்டியை வைத்துக்கொண்டு நாட்டை எப்படிக்காப்பாற்றம் போகுருரோ. திரு. நிஜலிங்கப்பா?

திரு. சி. சுப்பிரமணியம், திரு. பக்ருதீன் அலி அகமது ஆகிய இருவரையும் காங்கிரஸ் செயற்குழுவிலிருந்து வெளியேற்றிய செயல், வடிகட்டிய போக்கிரித்தனமாகும். காந்தி பஜனை பாடு வின் பிரதமர் ஒரு அங்கமாக இருக்கவில்லை - இருக்கவிடவில்லை சின்டிகேட் 'கனவான்கள்' ஆம்; லால்பகதூர் சாஸ்திரி காலத்திலும்தான்.

திரு காமராசர் குறிப்பிடும் கூட்டுத் தலைமை ஆட்சித் தலைமையைத் தன்னில் ஒரு அங்கமாகப் பெருததோடு அதற்குப் போட்டித் தலைமையாகவும் செயல்பட்டது இது வடிகட்டிய அரசியல் அநாகரிகம் . இந்த அநாகரிகம்தான், இன்று நேர்ந்துள்ள அனர்த்தங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

நேருவுக்குப்பின் வெளிப்படையாக இயங்கியகூட்டுத் தலைமையால், காங்கிரஸ் கட்சி வளர்ந்ததா? வலுப்பெற்றதா? என்ருல் 'இல்லை' என்று துணிந்து சொல்லலாம் அத்துடன், கொள்கை ஏதுமற்ற இந்தக் கூட்டுத் தலைமையால், காங்கிரஸ் கட்சி, நாளுக்குநாள் பலவீனமடைந்தே வந்தது இந்த உண்மை கடந்த பொதுத் தேர்தலின் முடிவிலே வெளிப்பட்டுவிட்டது. அதன் விளைவாகத்தான் கூட்டுத்தலைமையை எதிர்க்க முன்வந்தார் இந்திரா

(1-ம் கலம் பார்க்க)

## மாணவர்..

2 பக்கத் தொடர்ச்சி]

தைப் பயன்படுத்திய மாணவர் கோஷ்டியின் நடுமத்திய வீரர் திரு ஆர் யோகராசா ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளையின் பின்னர் மாணவர் கோஷ்டியினரின் அதிரடிகளை ஆசிரியர்கள் சமாளிக்க முடியாமல் திணறியது ரசிப்பாக இருந்தது. ஆனுலும் கோல்காப்பு வீரரின் திறமையினுல் எத்தனையோ கோல்கள் போடும் சந்தர்ப்பத்தை மாணவர்கள் இழந்தனர்.

விளையாட்டு முடிவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கும் வரையும் திருவாளர்கள் எம் எஸ் சீனித்தம்பி, பி. அண்ணுசாமி, ஜே எஸ் கிறிஸ்ததாஸ் ஆகியோர் தமது முழுத்திறமையையும் காட்டியும் ஆசிரியர்கோஷ்டி இரண்டாவது கோலைப் பெறமுடியவில்லை. மாணவர் கோஷ்டியின் வலது கரை முன்னணிவீரர் திரு. சிறீதரன் தனது கோஷ்டிக்கு இரண்டாவது கோலைப் போட்டார்.

ஆசிரியர் கோஷ்டியை மாணவர்கள் 2—1 கோல்களால் வெற்றியீட்டினர். திரு வி. இராஜேஸ்வரன் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமை ஆற்றினுர்.

# 15340 ஆசிரிய பதவிகள் நாட்டில் காலியாகவுள்ளன

## ஆசிரிய கண்காட்சி தரும் தகவல்

அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்தின் ஆதரவிலான கண்காட்சி ஒன்று கொழும்பில் இம்மாதம் 9-ம் திகதி நடைபெற்றது. ''கல்வியும் ஆசிரிய சேவையும்'' என்னும் பொருளில் நடைபெற்ற இக் கண்காட்சியில் ஆசிரிய சேவையிலுள்ள குறைபாடுகள் நன்கு சித்தரிக்கப் பட்டிருந்தது.

இக் கண்காட்சியிலிருந்து சேகரிக்கப்பட்ட சில தகவல்கள் இங்கு தரப்படுகின்றன.

இலங்கையின் மாணவர் தொகை:- 1949-ம் ஆண்டில் 68,224. 1959-ம் ஆண்டில் 1,71,200. 1963-ம் ஆண்டில் 1,13,662. 1968-ம் ஆண்டில் 1,19,275

இலங்கை பல்கலைக் கழகங்களின் மாணவர் தொகை:- 1948-ம் ஆண்டில் 1612. 1964-ம் ஆண்டில் 7182. 1965-ம் ஆண்டில் 10733. 1966-ம் ஆண்டில் 14422. 1968-ம் ஆண்டில் 14779.

பாடசாலைகளின் தொகை: 1947-ம் ஆண்டு 5915. 1967-ம் ஆண்டு 9585. 1968-ம் 9555.

ஆசிரியர் தொகை:- 1948-ம் ஆண்டு 33.668. 1964-ம் ஆண்டு 93,789. 1968-ம் ஆண்டு 89282.

1968-ம் ஆண்டு ஜூன் மாத ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையின் பிரகாரம் இலங்கைக்கு வேண்டிய ஆசிரியர் தொகை:- 1,03,211. சேவையிலுள்ள ஆசிரியர் தொகை:-87,771. ஆசிரிய சேவையில் இன்னமும் 15,340 காலி இடங்கள் உண்டு.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தொகை:- 1947-ம் ஆண்டு 1577. 1964-ம் ஆண்டு 5618. 1968-ம் ஆண்டு 5666.

1967-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்வி இலாகாவுக்கு ஒதுக்கப்பட்ட பணமும், செலவழியாத தொகையும்:- ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கு ஒதுககப்பட்டது 20,00,000 ரூபா. இதில் 12,04,474 ரூபா செலவழிக்கப்படவில்லை.

பாடசாலைகளின் நிரந்தரக் கட்டடத்துக்கு 20,00,000 ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் 16,72,525 ரூபா செலவழிக்கப்படவில்லை.

மருதானை தொழில் நுட்பக் கல்லூரிக்கென ஒதுக்கப்பட்ட 20,00,000 ரூபாவில் ஒரு சதமும் செலவு செய்யப்படவில்லை.

மத்திய விவசாய நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட 75,000 ரூபாவிலும் அம்பாறை தொழில் நுட்பக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட 25,500 ரூபாவிலும் கூட ஒருசதமும் செலவழிக்கப்படவில்லை.

விஞ்ஞான உபகரண நிலையத்துக்கு ஒதுக்கப்பட்ட 1,50,000 ரூபாவில் 1,34,714 ரூபா செலவு செய்யப்படவில்லை.

பாடவழி காட்டி முன்னேற்றத்துக்கு ஒதுக்கப்பட்ட 5,67,500 ரூபாவில். 2,86,228 ரூபா செலவு செய்யப்படவில்லை. (கா. நி)

கும்படி அவரைக்கேட்டேன். அவர் உடன் ஒப்புக்கொண்டு, மறு ஞாயிறன்று பலகைமூலம்தம்மை அழைக்கச் சொன்ருர்.

காளிதான் என்னை அதிகம் தொந்தரவு செய்கிறது ஏதேதோ கூச்சல்களைக்கேட்கிறேன். என்னைக்காளி கொல்ல முயலுவதாக அஞ்சுகிறேன் விசித்திரமான கனவுகள் வருகின்றன சில சமயம் பைத்தியம் பிடித்ததுபோலவே இருக்கிறது. இந்த என் அனுபவங்களைப் பற்றி தயவுசெய்து, விளக்கம் தருமாறு வேண்டுகிறேன்''.

0 0 0

திரு. முன்ஷி இதற்கு பின்வருமாறு பதில் தருகின்ருர்:

தானுக எழுதுவது, பேசும் பலகை இவை மூலம்ஆவிகள் பேசுவதாகக் கூறுவதைப் பற்றி பல வருடங்களாக அறிந்துள்ளேன். பலவித நிலைகளில் இந்த ஆவி உலக சமாச்சாரத்தைப் பற்றி நானே ஆராய்ந்துள்ளேன். முதலில் இதுபெய அற்புதம் போலவேபட்டது ஆனுல் இது ஒரு சாதாரண விஷயம். பள்ளிச்சிறுமிகளும் இதைச்செய்யலாம். மனதை தீவிரமாக ஒருமுகப்படுத்திசிரகிக்கும் மனதுள்ள ஒருவரைத்தூண்டி, ஒரு பொய் ஆசாமியை சிருஷ்டித்து அதன்மூலம் கேள்விக்கு பதில்களைப்பெறலாம்.

இந்தப்பொய் ஆசாமிகள், ஆவிகளோ, விடுபட்ட ஆத்மாக்களோ அல்ல. கடவுள்களோ தெய்வங்களோ அன்று. தெய்வீகப் பார்வையோ அல்லது அனுபவமோ அவற்றுக்குக் கிடையா. அழைக்கும் மனிதரைவிட அதிகமான அறிவும் அவர்களுக்கு இல்லை

கிடைக்கும்பதில்கள் சர்வசாதாரணமானவை. சில சமயம் நம்பக்கூடியதாக உள்ளன. ஆவியை அழைப்பவர்களின் மனோதத்துவங்களே கிடைக்கும் பதில்களில் பிரதிபலிக்கின்றன. ஆவிகளை அழைத்து, அவை கூறுபவை உண்மை என்று நம்பினுல், அவை மனதைப் பற்றிக்கொள்ளும். அந்த ஆவிகள் தெய்வீகமானவை என்றும், அவை கூறும் யோசனைகளை ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் தோன்றக்கூடும். இவ்வித மனேநிலைஏற்பட்டால் இந்த ஆவிஉலகப் பேச்சு ஆபத்தாகி மனதையே நிதானமில்லாமலாக்கிவிடும்.

பலகைமூலம் உங்களிடம் பேசும் காளிதேவியும், சங்கராச்சாரியாரும் போலி ஆசாமிகள் ஆவி உலகமூலம் அவர்களை அழைக்க முடியுமானுல், பிரார்த்தனை, தபஸ்யோகம், கடவுளிடம் பின்பற்றினுல், மனம் சரியானவழியில் தெய்வத்தை நோக்கிச்செல்வதாக இருக்கும்''

0 0 0

கொழும்பிலிருந்து திரு. சி வே சிவ ஞானப்பிரகாசம் என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையில், 'செல்வி வித்தகம் அவர்களின் மனப்பக்குவம், புனிதம், முன்னேற்றம் யாவும் இத்துறையில் போற்றப்படவேண்டியவை. அவரது பூர்வ புண்ணியத்தைப் போற்றுகிறேன்'' என்று எழுதிவிட்டு மதுரை குருமகாசந்நிதானம் இதுபற்றி எழுதியுள்ள நூல் இங்கு கிடைக்காததால் அதிலுள்ள சில முக்கிய விஷயங்களை எடுத்துத் தந்துள்ளார்.

''ஆவி உலகத்தவரோடு பேசுதலும், தொடர்பு கொள்ளுதலும் பேய்களோடு பேசுவதற்குச் சமானமாகுமென்று சிலர் தப்பாக நினைத்து அஞ்சி அஞ்சி ஒதுங்கப் பார்க்கின்றனர். சிலர் ஆவி உலகத்தில் வாழும் இறந்தவர்கள் எல்லோரும் மனிதநிலைக்கு மேம்பட்ட தெய்வநிலையை அடைந்துவிட்டதாகத் தவருக எண்ணுகிருர்கள். அவர்களிடம் தாங்கள் உலகியல் விஷயங்களை சோதிடரிடம் சாத்திரம் கேட்பது போலக்கேட்டு அவற்றினுல் நம்பிக்கை இழப்பதும் உண்டு. இவ்வித ஆராய்ச்சியிலே உண்மையில் வெற்றிகாணவிரும்பின்முதலில் இதுபற்றிய நூலை நிதானமாகப் படித்து விளக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

(மதுரைகுருமகா. சந்நிதானம் எழுதிய அந்நூலின் புதிய பதிப்பை வெளியிடுவதற்கான முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது.)

0 0

உடலைத் துறந்துலகேழுங்
கடந்துலவாத துன்பக்,
கடலைக் கடந்துய்யப்
போயிடலாகும் வகை
வண்ணப்
படலைச் சடைப்பர
வைத்திரைக் கங்கைப்
பனிப் பிறைவெண்,
சுடலைப் பொடிக் கடவுட்
கடிமைக் கட்டுண் நெஞ்சமே
—அப்பர் அடிகள்

## யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் கிளைக்கு முன்னுல் கண்டெடுக்கப்பட்ட திறப்பு ஒன்று (ஒரு அறையின் நம்பர் பொறிக்கப்பட்ட வளையத்துடன்) எட்வேட் சில்வா என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் வேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org